சென்னை வியாபாரி

என்கிற

தென்னிந்தியா வர்த்தக ஜர்னல்

புஸ்தகம் 1. Vol. 1. | ஏப்பிரல் 1913. | ஸஞ்சிகை 1. No. 1.

Ourselves.

சென்னை வியாபாரி என்கிற

நாம்.

ஸகலலோக ரக்ஷகரான கடவுளுடைய திருவருளால், இந்தப் பிரசுரம், "சென்னை வியாபாரி" என்று சொல்லும்படியான தென் இந்தியா வர்த்தக ஜர்னலின் முதல் சஞ்சிகையானபடியால், இப்பத்திரிகையின் நோக்கம் என்னவென்றும், இதை நடத்திவர முன்வந்திருக்கும் நாம் யார் என்றும், என்ன காரணங்களைக் கொண்டு இதை ஸ்தாபிக்க முன்வந்திருக்கிறோம் என்றும் உலகத்தார் அறிந்துகொள்ள சகஜமாய் விரும்புவார்கள். ஆதலால் இவைகளைக் குறித்து இரண்டொரு வசனம் இவ்விடத்தில் எடுத்தெழுதுவது அனாவசியமென்று எண்ணப்படமாட்டாது.

தென்னிந்தியாவிலிருக்கும் இந்தியர்கள் செய்துவரும் வியாபாரத்தையும், கைத்தொழிலையும் பாதுகாத்து விருத்தி செய்யவேண்டுமென்கிற நோக்கத்துடன் சென்னபட்டணத்தில் "சதரன் இன்டியா சேம்பர் ஆப் காமர்ஸ்" (Southern India Chamber of Commerce) என்று சொல்லும்படியான தென்னிந்தியா வர்த்தக ஆலோசனை சபை 1909௵ அக்டோபர்௴ 6௳ ஸ்தாபிக்கப்பட்டது. நம் தென்னிந்தியா வர்த்தகர்கள் சீமை, அமெரிக்கா முதலிய தேசங்களுடன் செய்துவரும் வியாபாரத்தையும் இந்த சபையார் கவனித்து அந்த வகையிலும் நம்மவர்களுக்கு நன்மை உண்டாகும்படி பிரயத்தனங்கள் செய்துகொண்டு வருகின்றார்கள். இச்சபை கடந்த நான்கு வருஷங்களாக சிறந்த வேலைகள் செய்துவந்துகொண்டிருக்கின்றதென்று அச்சபையார் வருஷவாரி பயிரங்கப்படுத்திவரும் ரிப்போர்ட்டுகளால் தெளிவாய்த் தெரியக்கூடியதாயிருப்பதால், அவைகளைப்பற்றி இவ்விடத்தில் எடுத்தெழுதுவதனாவசியமென்று விட்டுவிட்டோம்.

நம் தென்னாட்டில் உள்ளூர், நாகப்பட்டணம், கும்பகோணம், திருச்சினாப்பள்ளி, மதுரை, கள்ளிக்கோட்டை, பாலக்காடு, காக்கிநாடு, குண்ட்டூர் முதலிய பிரபலமான வர்த்தகஸ்தலங்களிருக்கும்படியான முதிர்ந்த அனுபோகமுடைய பாரி வர்த்தகர்கள் இச்சபையில் மெம்பர்களாக இருந்து வருகின்றார்கள். வியாபாரிகள் வியாபார ஸாமான்களின் காலநிலவரங்களையும், விலை ஏற்றத்தையும், இறக்கத்தையும் அறிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி தங்களுடைய சாமான்களின் விலைகளை ஒழுங்கு

162037

படுத்திக்கொண்டு நஷ்டமடையாதபடி வியாபாரஞ் செய்துவரும்படியாக இச்சபையார் மாதமிருமுறை மார்க்கட் ரிப்போர்ட்டு 1910-ஞு முதல் பிரசுரஞ் செய்துகொண்டு வந்தார்கள்.

இந்த மார்க்கட் ரிப்போர்ட்டுகள் பெரும்பாலும் எல்லா வியாபாரிகளாலும் ஆதரிக்கப்பட்டும் வாங்கப்பட்டும் வந்தன. இந்த ரிப்போர்ட்டுடன் ஏற்றுமதி, இறக்குமதி விஷயங்களும், இன்னும் வியாபார சம்பந்தமான பற்பல விஷயங்களையும் சேர்த்து புஸ்தக ரூபமாக அச்சிட்டு வெளிப்படுத்தினால் வர்த்தக வகுப்பினருக்கு மிகவும் பிரயோஜனமாக விருக்குமென்று நமக்கு எழுதியிருக்கிறார்கள்.

நம் வர்த்தகர்கள் வர்த்தக விஷயமாய் அதிக அவசியமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியவிஷயங்கள் பல உள. முதலாவது, இன்ன இன்ன சாமான்கள் இன்ன இன்ன விடங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன வென்றும், அவைகள் இன்ன இன்ன மார்க்கெட்டுகளில் விற்பனையாகி வருகின்றன வென்றும், அன்னிய நாட்டார் எந்தெந்த அன்னிய தேச துரைமுகங்களுக்கு சாமான்களை அனுப்பி லாபம் சம்பாதித்து வருகிறார்கள் என்றும் பெரும்பாலும் தெரியமாட்டாது. ஓங்கி நடந்துவந்த ஒரு வியாபாரம் சளைத்துப்போனால் மறுபடியும் அதை ஓங்கும்படியாகச்செய்யும் உபாயங்கள் தெரியாமல் அனேக வர்த்தகர்கள் மயங்குகின்றார்கள். வியாபார சம்பந்தமாக வர்த்தகர்கள் தெரிந்துகொள்ளவேண்டியவை பல இருந்தும் நம் தென்னாட்டில் மத சம்பந்தமாகவும், சட்ட சம்பந்தமாகவும், பொதுவர்த்தமான சம்பந்தமாகவும் பத்திரிகைகள் ஏற்பட்டிருக்கின்றனவே ஒழிய, வியாபாரத்தைப் பாதுகாத்து ஆதரித்து வியாபாரிகளுக்கு உலக வியாபார வர்த்தமானங்களையும், வியாபாரசம்மந்தமானபுத்தியுக்திகளையும் எடுத்துசொல்லக்கூடிய பேப்பர் நாளதுவரையில் ஸ்தாபிக்கப்படவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே! ஐரோப்பா, அமெரிக்கா முதலிய அந்நியநாடுகளில் பீஸ்கூட்ஸ் என்கிற ஜவுளி, பஞ்சு, இரும்பு முதலிய வியாபாரம் ஒவ்வொன்றிற்கும்நூற்றுக் கணக்கான பத்திரிகைகள் ஏற்பட்டு அந்த வியாபாரங்களைக் கொஞ்சமேனும் சோர்வடையவிடாமல் நாளுக்குநாள் செல்வமாய் வளர்த்துக் கொண்டுவந்து அத்தொழிற்களைச் செய்பவர்களை பூலோகம் ஆச்சரியப்படும்படியான கோடீஸ்வரர்களாகச் செய்து விட்டிருக்கின்றன.

நம்மிந்தியாதேசம் ஆதிகாலமுதல் பயிர்தொழில் ஒன்றையே மிகவும் பலமான ஆதாரமாக நம்பிக்கொண்டுவந்த தேசம். காலமாறுபாட்டாலும், பூமியின்வளப்பம் நாளுக்குநாள் குறைந்துகொண்டுவருவதாலும், மாத மும்மாரி பெய்தகாலம்போக வருஷம் ஒருமாரி பெய்வதே அத்திபுஷ்பிப்பதா யிருப்பதாலும், இன்னும் பலவிதமானகாரணங்களாலும், இந்தியாவின் பொருளாதார நிலைமைக்கு வேளாண்மைதொழில் ஒன்றையே எக்காலமும் நம்பிக்கொண்டிருக்கலாம் என்கிற எண்ணம் நாளுக்குநாள் குறைவுபட்டு வருகின்றது. பயிர்தொழில் முன்னிருந்த சிறந்த நிலைமைக்குக்கொண்டுவந்து விடவேண்டுமென்று நம் காருண்ய கவர்மெண்டார் அன்னிய நாடுகளிலிருந்து நூதன விவசாய ஆயுதங்களைத் தருவித்துக் காண்பித்துப் போதித்தும், விவசாயிகளுக்கு கடன்கொடுத்து வாங்கும்படியாக விவசாய பாங்கிகள் ஏற்படுத்தியும், சோதனைப் பண்ணைகள் ஸ்தாபித்தும், தாங்களே சாகுபடி செய்து காண்பித்தும், பாய்ச்சல் வசதிக்கு வேண்டிய காரியங்களை எல்லாம் செய்து மிகவும் பலமான பிரயத்தனங்கள் செய்துவருகின்றார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆயினும் ஜனத்தொகை நாளுக்குநாள் விர்த்தியடைந்துவருவதால் பயிர்தொழில் விருத்தி

அடைந்து முன் நிலைமைக்கு வந்தபோதிலும், அந்த தொழில் ஒன்று இந்தியாவுக்கு எப்போதும் குறைவுபடாத பொருளாதாரத்தைக் கொடுக்கக்கூடும் என்று நிச்சயமாய் நம்பமுடியாது. ஆகையால் இந்தியாவின் பொருளாதார நிலைமை பலப்படவேண்டுமானல் இந்தியர்களின் வியாபாரமும் பலப்படவேண்டுமென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றதல்லவா ?

நிற்க, ஆனரபில் சர் எட்வர்ட் கிளார்க் சென்ற பிப்ரவரி மாஸத்தில் வைசிராய்சட்ட சபையில் இந்தியன் கம்பெனி மசோதா ஆக்டை பிரத்தியேக கமிட்டியார் பரிசிலனைக்கு அனுப்பும்படி யோஜனைசொன்னபோது, அடியிற்கண்டதாற்பரியம்கொள்ளும்படி பேசினர். அதாவது என்னவென்றால்,—இந்தியர்கள் தங்களுடைய திரவியத்தை புதைத்துவைக்கும் புராதீன வழக்கத்தைவிட்டு விட்டு, பரஸ்பர நம்பிக்கை பூண்டு கூட்டுவியா பாரக்கம்பெனிகளில் போட்டு வியாபாரம் நடத்திவரத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்றும், அவர்களிடம் புதிதாய்த்தோன்றியிருக்கும் இந்த குணதிசயத்தை விருத்தி செய்து கொண்டுபோகவேண்டியது கவர்ன்மெண்டாருடைய முக்கியக்கருத்து—என்றும் எடுத்துப்பேசினர். ஆகையால் இந்தியர்களுடைய வியாபாரம் பலப்படவேண்டுமென்று கவர்ன்மெண்டார் நினைப்பதுபோலவே தேசவிஷயங்களை நன்றாய் அறிந்த ஜனங்களும் அபிப்பிராயப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அப்படி வியாபாரத்தைப் பலப்படுத்தவேண்டிச்செய்யப்படும் பிரயத்தனங்களுக்குள் வியாபாரசம்பந்தமான பத்திரிகை முயற்சி ஒன்று அவசியம் என்று எவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆதலால் மேலே எடுத்து எழுதிக்கொண்டு வந்த காரணங்களை முன்னிட்டு "சென்னை வியாபாரி" என்கிற இந்தப் பத்திரிகையை ஸ்தாபித்து நடத்திவரத் துணிந்தோம். இப்பத்திரிகையில் எடுத்து எழுதி வரப்படும் விஷயங்கள் ஏற்கனவே இப்பத்திரிகை விஷயமாக பிரசுரமான துண்டு விளம்பரங்களில் பயிரங்கப்படுத்தப்பட்டிருக்கின்றன.

தென்னிந்தியா வர்த்தக ஆலோசனை சபையாருடைய உத்திரவின்பேரில் இதுபிரசுரஞ் செய்யப்பட்டுவருகிறபடியால், இப்பத்திரிகையை நடத்தமுன் வந்திருப்பவர்களும் மேற்படி சபையில் உத்திரவாதமுள்ள சம்பந்தத்தை யுடையவர்களான படியாலும், உண்மையில் வர்த்தகர்களுக்கு பிரயோஜனத்தைக் கொடுக்கும்படியான மார்க்கத்தில் நடத்தப்பட்டுவர வேண்டிய அவ்வளவு பிரயாசை எடுத்துக்கொள்ளுமென்பதில் சந்தேகமில்லை.

இப்பேற்கொத்த ஒருமுயற்சி சோர்வடையாமல் எந்நாளும் செழிப்பாய் நடைபெறவேண்டுமானல், பொதுஜனங்களுடையவும், அதுவும் முக்கியமாய் வர்த்தக வகுப்பாருடைய கூட்டுறவையும், ஆதரவையும் மனப்பூர்வமாய் பெற்றிருக்கவேண்டும். அக்கூட்டுறவையும், ஆதரவையும் நம் "சென்னை வியாபாரி" க்குத் தந்தருளும்படியாக திருவருளைச் சிந்திக்கின்றோம். சுபம்! சுபம்!! சுபமஸ்து!!!

The Corporation and the Iron Dealers of Madras.

சென்னை முனிசிபாலிட்டியும் இரும்பு வர்த்தகர்களும்.

சென்னபட்டணம் ஜியார்ஜடவுன் ராசப்ப செட்டி தெருவிலிருக்கும் இரும்பு வியாபாரிகள் சென்னபட்டணம் முனிசிபாலிட்டி தோன்றுவதற்கு முந்தியே அந்தவிடத்தில் வியாபாரம் செய்துவருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கப்பலிலிருந்து இறக்குமதி

யாகிக், கொண்டுவரப்படும் சரக்குகளின் வண்டிகளை அவர்களுடைய கடைகளுக்கு எதிரில் நிறுத்தி சாமான்களை எடுத்துக்கொள்ளுவதும், சில சமயங்களில் சரக்குகளை ரோட்டின் ஓரத்தில் போட்டுவைப்பதும் புராதின வழக்கம் என்பதும் எல்லோருக்கும் தெரிந்தவிஷயம்.

சொற்பகாலத்திற்கு முந்தி சரக்குகள் விசேஷமாகவந்த சமயத்தில் அவைகளை உடனே கிடங்களுக்கு அனுப்ப சவுகரியப்படாமல் ரோட்டின் ஓரத்திலேயே போட்டுவைக்கும்படியாக நேரிட்டது. போலிசார் அடிக்கடி வந்து ஆக்ஷேபித்துகொண்டிருந்தார்கள். இதனால் வர்த்தகர்கள் ரோடு ஓரத்தில் சொற்ப சதுர அடி நிலம் தங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டால் அதில் தாங்கள் சரக்குப் போட்டு வைத்துகொள்ள சௌகரிய மாயிருக்குமென்று சென்னை கார்போரேஷன்காரர்களுக்கு மனு செய்துகொண்டார்கள். முனிசிபாலிட்டியார் அவர்களுடைய கோரிக்கை யின்படி ஒரு சதுர அடி ஒன்றுக்கு ரூ 3 விகிதம் குத்தகைவிட்டு வந்தார்கள். இப்படி 1912ளு ஜுலைமீ வரையில் நடந்துவந்தது.

ஜுலைமீ 6உ திடீரென்று குத்தகைநிலத்திற்கு சதுர அடி ஒன்றுக்கு 6 ரூ விகிதம் வர்த்தகர்கள் கட்டவேண்டுமென்றும் இல்லாவிட்டால் நிலத்தைவிட்டுவிடலாமென்றும் முனிசிபாலிடியார் நோட்டிஸ்கொடுத்திருந்தார்கள். இதுவிஷயமாக முனிசிபாலிட்டியாருக்கும் வர்த்தகர்களுக்கும் போக்குவரத்தான கடிதங்களை நாம் பார்வை யிட்டோம். முனிசிபாலிட்டியாரிடமிருந்து வந்த எந்த கடிதத்திலும் இப்படி தீர்வையை உயர்த்தினதற்கு யாதொருகாரணமும் சொல்லப்படவில்லை. முனிசிபாலிடியார் பிடிவாதமாய் ஒரேஒருபதில் சொல்லுகிறார்கள். அதாவது என்னவென்றால் " அடி ஒன்றுக்கு ரூபாய் 6 விகிதம் கட்டினால் கட்டுங்கள்.—இல்லேல் விட்டுவிட்டு உங்களுக்கு சரிப்பட்ட விடங்களுக்குப் போய்விடுங்கள்" என்று சொல்லுகிறார்கள்.

இது விஷயமாக கார்ப்போரேஷன் அடுத்த மீட்டிங்கில் ஷை ராசப்பசெட்டி தெருவிருக்கும்படியான டிவிஷனின் கமிஷனர் ம-ா-ா-ஸ்ரீ காயார் தேசிகாச்சாரியார் அவர்கள் கார்போரேஷன்காரர்களுடைய கவனத்தைஇழுப்பதாக நோட்டிஸ் பயிரங்கப்படுத்தியிருக்கிறார். வர்த்தகர்கள் ஒரு மகசர் தயார்செய்து கார்போரேஷனுக்கு அனுப்பி யிருப்பதுமன்றி தென்னிந்தியா சேம்பர்ஆப் காமர்ஸ் என்கிற வாத்தக ஆலோசனை சபைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

தென் இந்தியா வர்த்தக ஆயோசனை சபையார் தங்களுடைய சபை மீட்டிங்கில் இதைப்பற்றி ஆலோசனைசெய்து கார்ப்போரேஷன்காரர்களுடைய உத்திரவு மிகவும் கொடுமையாக விருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டிருப்பது மன்றி இதுவிஷயமாய் சென்னபட்டணம் சேம்பர் ஆப் காமர்சில் இருக்கும்படியான முனிசிபல் கமிஷனர்களுடைய கவனத்தையும் இழுக்கும்படியாக அச்சேம்பருக்கும் எழுதியிருக்கிறார்கள்.

கார்போரேஷன்காரர்கள் இரட்டிப்பு மடங்கு தீர்வை போட்டிருப்பதும் அதற்கு யாதொரு காரணமும் சொல்லாமலிருப்பதும் "கொடுமை" என்று வெளிப்படையாக அந்த உத்திரவைப் பார்த்தமாத்திரத்தில் தெரிந்துகொள்ளக் கூடியதாகவிருப்பதால் நாம் அதன் சுரூபத்தை எடுத்துச்சொல்ல வேண்டியதனுவசியம்.

ராசப்ப செட்டி தெருவிலிருக்கும்படியான பெரும்பாலான கிட்டங்கிகள் ஸ்ரீ கந்தசாமி கோவிலுக்குச் சொந்தமானவை; அந்தக் கடவுள் பேரில் வைத்திருக்கும் உறுதியான பக்தியால் வர்த்தகர்கள் இந்த கிட்டங்கிகளுக்கு மிதமிஞ்சின வாடகைகள் கொடுத்து வருகின்றார்கள்.

முனிசிபாலிட்டியாரும் வீட்டுவரி மூலியமாய் மேற்படி கிடங்குகளுக்கு அதிகப்படியானவீட்டுவரி வசூல்செய்துவருகிறார்கள். ஆகையால் வர்த்தகர்கள் இந்த ராசப்ப செட்டி தெருவை விட்டுவிட்டுவேறே எந்தவிடத்திற்காவதுபோய் விட்டால், அந்த கிடங்குகளின் வாடகை குறைந்துபோய் முனிசிபாலிட்டியும் வருமானத்தை இழந்துவிடும். பிரஸ்தாப வர்த்தகத்தின் அவசியத்தை கவனிக்கும்போது, ரோட்டின் ஓரத்தில் நேரக்கூடியஇடஞ்சல் ஒருபொருட்டாக எண்ணப்பட மாட்டாது. முனிசிபாலிட்டியாருடைய பரிபாலனத்திற்கு உட்பட்ட சகலதொழிலாளிகளுக்கும், தொழில் நடத்துவதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டியது அவர்களுடைய கடமையாக எண்ணப்படவேண்டும். ஆகையால் இவ் வர்த்தகர்களுடைய மகசரை முனிசிபாலிட்டியார் அநுதாபத்துடன் கவனித்து அவர்களுடைய குறைகளை அதிதீவிரத்தில் நீக்குவார்கள் என்று நம்புகின்றோம்.

The Memorial of the Mercantile Clerks' Union.

வியாபார காரியஸ்தர்கள் மகசர்.

மெர்க்கன்டயில் கிளார்க்ஸ் யூனியன் (Mercantile Clerks' Union) என்கிற சபை சென்னபட்டணம், ஜியார்ஜ்டவுன், நாராயண முதலி தெருவிலிருக்கும் கலவே ராமண்ண செட்டி சத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

கிடங்குத் தெருவு, ஜவுளி கிட்டங்கிகளில் வேலைபார்த்துவரும் (ரயிட்டர்களல்லாத) குமாஸ்தாக்களுடைய குறைகளை கவனிப்பதற்காக இதை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சென்ற வருடம் டிசம்பர்மீ 29உ கூடிய மீட்டிங்கில் ரயிட்டர்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை ஞாயிற்றுக்கிழமை ஒய்வுநாள் விடப்படுவது போல, தங்களுக்கும் பிரதி ஞாயிற்றுக்கிழமை லீவு விடும்படியாக பிரார்த்திதுக்கொள்ளவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்திருந்தார்கள்.

அந்த தீர்மானத்தின்படி கிடங்குத் தெருவிலுள்ள முக்கியமான முதலாளிகளுக்கும், தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்கிற வர்த்தக ஆலோசனை சபையாருக்கும் அச்சிட்ட மகசர் அனுப்பியிருக்கிறார்கள்.

இந்த குமாஸ்தாக்கள் முதலாளிகளுக்கு வியாபாரத்தில் நேரே உழைத்து வருகிறவர்கள். அதாவது வியாபாரம் வாங்கவருகிறவர்களுக்குதங்கள் கடையிலிருக்கும்படியான தினிசுரகங்களை எல்லாம் காண்பித்து அவர்கள் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் சமாதானம்சொல்லி மனதை சந்தோஷிபிக்கச்செய்து வியாபாரத்தைக் குதிரும்படி செய்கிறவர்கள். இவர்கள் ஒவ்வொருநாளும் காலை முதல் இரவுவரையில் வியாபாரத்திலேயே கண்ணோட்டமாகவும் கவலையுமாகவிருந்து உழைத்துவருகிறவர்கள். கடுமையாக வேலைசெய்துவரும் இக் குமாஸ்தாக்களுக்கு மற்ற உத்தியோகஸ்தர்களைப்போல வாரத்திற்கு ஒரு முறை ஒய்வு நாள் இல்லாமலிருப்பது உண்மையில் விசனிக்கக்கூடியதாயிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

ஆயினும் முதலாளிகள் இந்த குமாஸ்தாக்களுக்கு ஞாயிற்றுக்கிழமை லீவு விடுவதற்கு இரண்டு மூன்று ஆக்ஷேபங்கள் ஒருக்கால் சொல்லக்கூடும். அவை என்னவென்றால் ரயிட்டர்களுக்கு லீவு விடுவதால் ரயிட்டர்கள் ஞாயிற்றுக்கிழமை எழுதும் கடிதங்களை திங்கட்கிழமை எழுதினதால் பாதகம் ஏற்படமாட்டாதென்றும் ஆனல் இந்த குமாஸ்தாக்கள் சம்பந்தப்பட்ட வியாபார வேலைகள் அப்படி தள்ளிவைக்கப்படக் கூடியனவல்லவென்றும்,

இவர்களுக்கு லீவு விடுவதென்றால் கிடங்கையே மூடிவைக்க வேண்டுமென்றும் ஒரு ஆக்ஷேபனை சொல்லக்கூடும்.

இரண்டாவது ஆக்ஷேபனை என்னவென்றால், கிடங்குத்தெருவு வியாபாரிகள் மொத்த வியாபாரிகள் என்றும், சரக்கெடுக்க வெளியூரிலிருந்துவரும் வர்த்தகர்கள் ஞாயிற்றுக்கிழமை வந்தால் அன்றையதினமே சரக்குபோட்டுக்கொண்டு போய்விடாமல் வீண் படிச்செலவு செய்துகொண்டு அடுத்த நாள் வரையில் காத்துக்கொண்டிருக்கும்படியாக விருக்குமென்றும் ஆக்ஷேபனை சொல்லக்கூடும். மூன்றாவது ஆக்ஷேபனை என்னவென்றால், உள்ளூரிலுள்ள கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும், வர்த்தக கம்பெனி உத்தியோகஸ்தர்களும் தங்களுக்குத் தேவையான ஜவுளிச் சரக்குகளை வாங்குகிறதற்கு ஞாயிற்றுக்கிழமைதான் வருவார்கள் என்றும் அன்றையதினம் கிடங்குகள் மூடியிருந்தால் அந்த உத்தியோகஸ்தர்களுக்கு அசௌகரியமாக விருப்பதுமன்றி முதலாளிகளும் வியாபாரமில்லாமல் நஷ்டமடையும்படியாக விருக்குமென்று ஆக்ஷேபிக்கக்கூடும்.

நாம் எதிர்பார்க்கும் இந்த ஆக்ஷேபனைகளுக்கு என்ன சமாதானம் சொல்லலாமென்று இப்போது யோசனைசெய்து பார்ப்போம்.

முதலாவது ஆக்ஷேபனையைப்பற்றி யோசிக்கின், ஞாயிற்றுக்கிழமைதோறும் எல்லாக் கிடங்குகளும் மூடியிருந்தால், இதே சரக்குகள் வாங்கக்கூடிய விடங்கள் இச்சென்னையில் வேறே இடம் கிடையாதபடியால், கிராக்கிகள் கெட்டுப்போகாமல் அடுத்த தினம் வந்துசேரும்.

இரண்டாவது ஆக்ஷேபனைக்கு சமாதானம் என்னவென்றால், கிடங்குத் தெருவு வியாபாரிகள் பெருத்த முதலாளிகள். அவர்களுடைய கிடங்குகளில்வந்து சரக்குப் போடும் வெளியூர் வியாபாரிகளும் பணக்காரர்கள். ஞாயிற்றுக்கிழமை கிடங்கு மூடியிருப்பதால் நேரிடக்கூடிய ஒருநாள் படிச்செலவை அவர்கள் ஒரு பொருட்டாக நினைக்கக்கூடியவர்களல்ல. மேலும் ஞாயிற்றுக்கிழமை கிடங்குகள் மூடியிருக்கும் வழக்கம் அவர்களுக்கு தெரிந்துபோய்விட்டால் அவர்கள் அன்றையதினம் வருவதை நிறுத்திப்போடுவார்கள். மூன்றாவது ஆக்ஷேபனை சாமானியமானது; சில்லரை வியாபாரம் செய்யவிரும்பும் உள்ளூர் உத்தியோகஸ்தர்களுக்கு பெரும்பாலும் கிடங்குத் தெருவில் வேலை கிடையாது. கிடங்குத் தெருவு ஞாயிற்றுக்கிழமை மூடியிருக்கும் வழக்கம் ஊர்ச்சிதத்திற்கு வந்துவிட்டால் குஜிலிக்கடைகளிலிருக்கும் சில்லரை வியாபாரிகள் ஞாயிற்றுக்கிழமை உத்தியோகஸ்தர்கள் கேட்கக்கூடியவும் கிடங்குத் தெருவில் மட்டிலும் அகப்படக்கூடிய ஜவுளிச் சரக்குகளை தயாராக வாங்கி வைத்துக்கொள்ளுவார்கள். ஆகையால் எந்த விதத்தில் யோசித்துப் பார்த்தாலும் இவர்கள் நிமித்தம் ஞாயிற்றுக்கிழமை லீவு விடுவதால் யாருக்கும் அசௌகரியம் உண்டாகமாட்டாது. முதலாளிகளுக்கும் யாதொரு நஷ்டமும் உண்டாகமாட்டாது.

மவுன்ட்ரோடிலிருக்கும் பாரிவர்த்தக கம்பெனிகள் ஞாயிற்றுக்கிழமை மூடிப்போடுவதையும், சைனாபெஜார் வர்த்தகர்கள் ஏலகடைக்காக மற்றக் கடைகளை எல்லாம் மாதம் ஒரு முறை மூடி வருவதையும் நாம் எடுத்தெழுத மறந்துபோகக்கூடாது.

நிற்க, எந்தத் தொழிலும் தொழில் செய்பவனுக்கு இன்பமாக விருக்கும்படி செய்தாலொழிய அவன் அந்த தொழிலை பிரியத்துடன் செய்துவரமாட்டான். தொழில் ஒரு பெரிய பளுவாகவும், பாரமாகவுமிருக்கும்படி எண்ணப்பட்டால், அத்தொழிலே ஒழுங்காய் நடைபெற்றுவரமாட்டாது.

குருவிக்குத்தகுந்த ராமேஸ்வரம் என்பது போல இவர்கள் சொற்ப சம்பளமுடைய குமாஸ்தாக்களாக விருந்தபோதிலும், ஒரு வாரம் இரவும் பகலுமாக தொல்லைப்பட்டுவந்த அல்லல், தொல்லைகள், உழைப்புகளிலிருந்து நீங்கி களையாறவும், மன உல்லாசமாகவிருக்கும்படியும், தேகசௌக்கியப்படுத்திக்கொள்ளவும், பந்துமித்திரர்களைப்பார்த்து சம்பாஷிக்கவும், திங்கட்கிழமை கிடங்கு திறந்தது முதல் மிருந்த உற்சாகத்துடன் வேலைசெய்துவரவும், இவர்களுக்கும் ஞாயிற்றுக்கிழமைதோறும் லீவு விடவேண்டும். ஆதலால் சேம்பர் ஆப் காமர்ஸ் என்கிற வர்த்தக ஆலோசனை சபையாரும் கிடங்குத்தெருவு முதலாளிகளும், இவர்களுடைய மகசரை கவனித்து கோறிக்கையை நிறைவேற்றி வைப்பார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

TRADE NEWS AND NOTES.

வியாபார வர்த்தமானங்களும் குறிப்புகளும்.

Railway Board.

ரயில் போர்டார்.

இந்தியாவில் இருப்புப்பாதைகள் சம்பந்தமாக இந்தியா மந்திரிக்கு யிருந்த அதிகாரம் ரயில்வே போர்டாருக்குக் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் ரயில்வே உபயோகங்களுக்காக கவர்ன்மெண்டாரால் வாங்கப்பட்ட நிலங்களிலிருக்கும்படியான பாத்திதையை அன்னியர்களுக்குக் கொடுக்க போர்டாருக்கு அதிகாரமில்லை. இப்படி அதிகாரமில்லாமலிருப்பது போர்டார் தெரிந்துகொள்ளாமல் ரயில்வே நிலங்களை குத்தகைக்கு விட்டுவந்தார்கள். சாதாரணமாய் ரயில் சிப்பந்திகள் வீடுகள் கட்டிக்கொள்ளவும், கிரிசினுயில் தடாகம் கட்டிக்கொள்ளுவதற்காகவும், அரிசி ஆலைகள் கட்டிக்கொள்ளுவதற்காகவும் ரயில்வே ஏஜண்டுகளும் மானேஜர்களும் குத்தகைக்கு விட்டுவருகிறார்கள். இந்தக்குத்தகையை ஒப்புக்கொள்ளும் வியாபாரிகள் வெகு நாள் வரையில் தங்களுடைய குத்தகை ஊர்ச்சிதத்திலிருக்குமென்று நம்பி திரண்ட பணச்செலவு செய்து சாஸ்வதக் கட்டிடங்கள் கட்டியிருக்கிறார்கள். இப்படியிருக்க ரயில்வே போர்டார் தாங்கள் அறியாமல் செய்த பிசகை திருத்திக்கொள்ளும் பொருட்டு இனி ரயில்வே நிலங்கள் குத்தகைக்கு விடப்படமாட்டாவென்றும் அவைகளுக்கு லைசென்சுமட்டிலும்தான் கொடுக்கப்படவேண்டுமென்றும் ரயில்வே கம்பெனி ஏஜண்டுகளுக்கும், மானேஜர்களுக்கும் சர்க்குலர் அனுப்பியிருக்கிறார்கள். லைசென்சுக்கும் குத்தகைக்கும் வித்தியாச மென்னவென்றால், லைசென்சு கொடுப்பவன் தன்னிஷ்டப்படி லைசென்சை ரத்து செய்துவிடலாம். குத்தகை பெற்றவன் குத்தகையை நம்பி பணச்செலவு செய்து சாஸ்வதக்கட்டடம் கட்டியிருந்தால் குத்தகை விட்டிருந்தவனிடமிருந்த குத்தகையை ரத்து செய்யும் அதிகாரம், குன்றிப்போயிருக்கிறது. போர்டார் விடுத்திருக்கும் சர்க்குலர் வர்த்தகர்களுக்கு நஷ்டத்தை விளைவிக்கக்கூடியதாயிருப்பதால் அவர்கள் இதுவிஷயமாக தீர்க்காலோசனை செய்து தகுந்த ஏற்பாட்டைச் செய்வார்களென்று நம்புகின்றோம்.

A New Cement Factory.

ஒரு புதிய சிமண்ட் பாக்டரி.

காதியவாரைச் சேர்ந்த புரோபண்டர் என்று சொல்லும்படியான சுதேச சமஸ்தானத்தில் "இந்தியன் சிமண்ட் கம்பெனி" யாரால ஒரு சிமண்ட் சாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பம்பாய் கவர்னர் அவர்கள் கடந்த 9வ தம்முடைய கரத்தால் அஸ்திவாரக்கல் போட்டார்கள். இந்த சிமண்டு சாலை ஸ்தாபிக்கப்பட்டிருப்பது இந்தியர்களால் என்றும், போடப்பட்டுவரும் மூலதனம் இந்தியர்களுடையதென்பதும் கவனிக்கப்படவேண்டிய விஷயங்கள். இந்த சாலையில் வருஷத்திற்கு 30,000 டன் சிமண்ட் தயார் செய்யப்படும். வருகிற அக்டோபர் மாதமுதல் சிமண்ட் தயார்செய்யப்பட்டு விற்பனைக்காக வருமாம். இந்தப் புதிய கம்பெனி, விளம்பரத்தால் பயிரங்கப்படுத்தப்படுவதற்குமுந்தியே இந்தக் கம்பெனிக்குச் சேரவேண்டிய எல்லாப் பங்குகளும் சேர்ந்துவிட்டனவாம்.

England and its Dependencies.

இங்கிலாந்தும் அதன் ஐக்கிய நாடுகளும்.

சென்ற ஜனவரி மாதம் ஈஸ்ட் இந்தியா அசோசியேஷன் முன்னில் சர். ஜி. மோல்ஸ்வொர்த் என்பவர் செய்த உபன்னியாசத்தின் சாராம்சம் என்னவென்றால், இங்கிலாந்தும் அதனுடைய ஐக்கிய நாடுகளும் ஒன்று என்று எண்ணப்பட்டு ஆளப்பட்டு வந்தால், அதன் வியாபாரத்திற்கும், மற்றும் தேவையுள்ள சாமான்களுக்கும் அன்னிய தேசத்தாரை எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டியதில்லை. இங்கிலாந்தின் நன்மையும் ஐக்கிய நாடுகளின் நன்மையும் ஒன்று என்றும் பிரிக்கப்படக்கூடியதல்லவென்றும் எண்ணி ஆளப்பட்டு வரவேண்டும். இந்த தேசங்களிலேயே செய்யப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் சாமான்கள் இந்த நாடுகளிலேயே செலவாய்விடும் என்றும், விற்பனைக்காக அன்னிய தேசங்களுக்கு அனுப்பவேண்டியதில்லை என்றும் சொன்னார்.

Technical Education in Mysore.

மைசூர் சமஸ்தானத்தில் கைத்தொழில் படிப்பு.

மைசூர் சமஸ்தானத்தார், சென்னைராஜதானியில் கைத்தொழில்களை விருத்திசெய்து சிறந்த பெயர் எடுத்திருக்கும் மிஸ்டர் ஆல்பிரட் சாட்டர்ட்டன் அவர்களை வரவழைத்து மைசூர் சமஸ்தான கைத்தொழில்களையும், பொருளாதார நிலைமையையும் விருத்திசெய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மிஸ்டர் சாட்டர்ட்டனுடைய ஆலோசனையின் பேரில் சமஸ்தானத்தில் வர்த்தகத்தையும் கைத்தொழில்களையும் கவனித்துவர ஒரு பிரத்தியேக இலாக்கா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நெசவுத்தொழிலை விர்த்திபடுத்தவும், நெசவுக்காரர்களுக்கு அட்வான்சு கொடுக்கும்படியாகவும், பட்டு நூற்கும் தொழிலை விர்த்திசெய்யும்படியாகவும், மூன்று கரும்பாலைகளை ஸ்தாபித்து வேலை செய்யும்படியாகவும், பொதுவாய்க் கைத்தொழில்களை விர்த்திசெய்யும்படியாகவும்—இவைகளுக்குத் தற்காலம் சமஸ்தானத்தார் ஐம்பதினாயிரம் ரூபாய் சாங்கிஷன் செய்து மிஸ்டர் சாட்டர்ட்டன்வசம் ஒப்புவித்திருக்கிறார்கள். மிஸ்டர் சாட்டர்ட்டன் சமஸ்தான கைத்தொழில் இலாக்கா டைரக்டராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Leather Trade.

தோல் வியாபாரம்.

மோட்டார்வண்டிகளுக்காகவும், மோட்டார் பைசிகல்களுக்காகவும் தோல் பலவிதமாக உபயோகப்பட்டுவருகின்றது. தோலைப் பதம் செய்கிறவர்கள் மிகவும் நேர்த்தியாகப் பார்வைக்குப்படும்படியாகப் பதம்செய்துவருகிறார்கள். மோட்டார்வண்டிகளே பெரும்பாலும் தோலினால் உடுத்தப்பட்டு வருகின்றனவென்று சொல்லவேண்டும். மோட்டார் வண்டிகளில் உட்காரும் இடங்கள் பூராவாக தோலினால் செய்யப்பட்டிருக்கிறது. சாதாரண பைசிகலிலும், மோட்டார் பைசிகலிலும் உட்காரும் சேணங்கள் தோலினால் செய்யப்பட்டு வருகின்றன. மோட்டார் வண்டிகளின் ரப்பர் ரோதைகள் கெட்டுப்போகாதபடி தோலினால் மேல்மூடி போட்டு வரப்படுகிறது. மோட்டார் வண்டியில் பிடிப்புகளுக்கு உலோகங்கள் பிரயோகப்படுத்தப்பட்டு வந்தபோதிலும், தோல் பிடிப்புகளே மிகப்பிரயோஜனமுள்ளதென்று ஒரு நிபுணர் அபிப்பிராயப்பட்டு எழுதியிருக்கிறார். ஓட்டும் பெல்ட்டுகளுக்கும் (Driving Belts) தோல் உபயோகப்பட்டுவருகின்றது. இவைகளுமன்றி மோட்டார் சவாரி செய்யும்போது உண்டாகும் தூசி உடம்பின்பேரில் படாதபடி தோலினால் செய்யப்பட்ட உடுப்பே போட்டுக்கொள்ளப்பட்டுவருகிறது. ஆகவே, தோல் மோட்டார் வண்டிகளின் நிமித்தம் பலவிதத்திலும் பலமாதிரியாக பிரயோஜனப்படுத்தப்பட்டு தோல் விற்பனையை விசேஷப்படுத்திவருகின்றது. மோட்டார் வண்டியில் உபயோகப்படுத்தப்பட்டுவரும் தோல்கள் மிகவும் நேர்த்தியாகப் பதப்படுத்தப்பட்டு, அப்படிப் பதப்படுத்தப்பட்ட தோல்கள் ஜனங்களுடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டிருப்பதால் தோ

லைப்பார்க்கிலும் வேறே எந்த சாமானுகிலும் தோலுக்குப்பதிலாக உபயோகப்படுத்தப்படுமென்று நீண்ட காலம் வரையில் தோல்வியாபாரிகள் நினைப்பதற்கிடமேயில்லை.

Ladies' Boots.

துரைசாணி பூட்ஸ்கள்.

அமெரிக்கா தேசத்தில் செய்யப்படும் துரைசாணி பூட்ஸ்களுக்கும், சில்ப்பர்களுக்கும் பம்பாயில் கனத்த கிராக்கியிருக்கின்றனவாம். இவ்வளவு கிராக்கியிருந்தும் பம்பாய் வர்த்தகர்கள் அவைகளை விசேஷமாய் தருவிக்கிறதில்லையாம். ஏனென்ருல், பம்பாய் வர்த்தகர்கள் அமெரிக்காதேச ஏற்றுமதி வியாபாரிகளுக்கு சரக்கிற்காக ஆர்டர் அனுப்பினுல், அவர்கள் சரியான சரக்கு அனுப்பாமல் அதற்குப் பதிலாக மட்டதினுசு சரக்குகளை அனுப்பிப்போடுவதுமன்றி கப்பல்களும் காலாகாலத்தில் வருகிறதில்லையென்று சொல்லுகிருர்கள். ஆயினும், அமெரிக்காதேசத்து பூட்ஸ்களுக்கும் சிலிப்பர்களுக்கும் பம்பாயில் கனத்த கிராக்கியிருக்கிறதென்பதில் தடையில்லை. இந்த பூட்ஸ்களையே தருவித்து விற்பனை செய்வதற்கு ஒருவியாபாரக் கம்பெனி ஏற்பட்டால் தகுந்த வியாபாரம் நடக்குமென்று கேள்விப்படுகிருேம்.

இந்தியாவில் பருத்திப்பயிர்.

லண்டனில் அவுஸ் ஆப் காமன்ஸ் (House of Commons) என்கிற பார்லிமெண்டு சபையில் இந்தியா பருத்திப்பயிர் விஷயமாக மிஸ்டர் லீச் என்பவர் இந்தியா மந்திரியை ஒரு கேள்வி கேட்டார். அதாவதென்னவென்ருல், கடந்த மூன்று வருஷங்கள் ஒவ்வொன்றிலும் பருத்திப்பயிர் மத்தியமாகாணங்களிலும், தென் இந்தியாவிலும் எவ்வளவு அளவு அதிகமாகப் பயிராயிருக்கிறதென்பதே. அதற்கு இந்தியா மந்திரியார் அடியிற்கண்டபடி கணக்கு கொடுத்திருக்கிருர் :—

	1909—10. (ஏக்ரா)	1909—10. (விளைவு பேல்.)	1910—11. (ஏக்ரா)	1910—11. (விளைவு பேல்.)
மத்தியமாகாணமும் பீராரும் ...	4,167,000	1,070,000	4,487,000	629,000
சென்னபட்டணம்.	1,569,000	180,000	1,585,000	182,000
பம்பாய் ...	5,794,000	1,426,000	6,527,000	1,317,000
	1911—12.		**1912—13.**	
மத்தியமாகாணமும் பீகாரும் ...	4,632,000	913,000	4,522,000	910,000
சென்னப்பட்டணம்.	1,698,000	190,000	1,938,000	269,000
பம்பாய் ...	4,303,000	540,000	5,621,000	1,341,000

Timber.

தேக்கு.

இந்திய இருப்புப்பாதைகளுக்கு சட்டங்கள் (slippers) முதலியவை போடும்பொருட்டு ஆஸ்திரேலியா தேசத்தில் உற்பத்தியாகும் தேக்குமரத்தை வாங்கிவரலாமாவென்று ரிப்போர்ட்டு செய்யும்படியாக மிஸ்டர் J. ஆடம் என்பவரை இந்தியா கவர்ன்மெண்டார் தெறிந்தெடுத்து அனுப்பினுர்கள்.

ஆஸ்டிரேலியாவில் உற்பத்தியாகும் "ஜாராத்" தேக்குமரம் சகல அம்சத்திலும் மற்ற தேசமரங்களைவிட சிலாக்கியமானதென்று இன்ஜினீர்கள் ஒப்புக்கொண்டு சிபார்சுசெய்திருக்கிருர்கள். இந்தியா தேசக்காடுகளில் உற்பத்தியாகும் தேக்குமரங்கள் ஆஸ்திரேலியா தேக்குமரங்களைவிட சிலாக்கியமானதாயிருந்தபோதிலும், அவைகளை வெட்டி பஜாருக்குகொண்டுவரவேண்டிய வசதிகள் செய்யப்படவில்லை என்றும், அதுவரையில் இந்திய மரங்களுக்கு கிராக்கிகள் அகப்படமாட்டா

தென்றும், ஆதலால் ஆஸ்டிரேலியா தேக்குமரத்தையே தருவிக்கவேண்டுமென்றும், ரிப்போர்ட்டு செய்திருக்கிறார். இந்திய இருப்புப்பாதைகளுக்காக லக்ஷக்கணக்கான பணத்திற்கு அன்னியதேச தேக்குமரங்கள் வாங்கப்பட்டுவருகிறபடியால், இந்தியாவிலுள்ள தகுந்த முதலாளிகள் இந்தியாதேச தேக்குமரங்களை வெட்டி பஜாருக்குக்கொண்டு வரும்படியான வசதிகளைச்செய்யலாம்.

The Trade of the World.

உலக முழுதிலும் நடக்கும் வியாபாரம்.

கமர்ஷியல் அமெரிக்கா (*Commercial America*) என்கிற பத்திரிகை அடியிற்கண்டபடி கூறுகின்றது:—உலகத்தில் எல்லாதேசங்களிலும் வியாபாரம் வருஷவாரி உயர்ந்துகொண்டு போகின்றது. 1897௵முதல் ஒவ்வொரு வருஷமும் 240,000,000 பவுன் அதிகப்படியான வியாபாரம் நடந்துகொண்டுவந்திருக்கின்றனவென்று மதிப்பிடப்படுகின்றது. 1850௵ல் எல்லா தேசங்களினுடைய ஏற்றுமதி இறக்குமதி மொத்தம் 800,000,000 பவுன் என்றும், 1910௵த்தில் 6,480,000,000 பவுன் என்றும் அதாவது 8 பங்கு அதிகமான வியாபாரம் நடந்துகொண்டுவந்திருக்கிறதென்றும் கூறுகின்றது. ஆனால் 1907௵ப மட்டிலும் உலக வியாபாரம் மொத்தத்தில் 40,000,000 பவுன் குறைந்துபோயிருக்கிறதென்றும் இந்தக்குறைவு கிரேட்பிரட்டன், ஜெர்மனி, பிரான்சு, யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஆகிய கைத்தொழிற்களை உடைய தேசங்களில்மட்டிலும் குறைந்துபோயிருக்கிறதென்று சொல்லுகிறது.

The Balkan War and the Commerce.

பால்க்கன் சண்டையும் வியாபாரமும்.

லக்ஷக்கணக்கான மனிதர்கள் இந்த சண்டையில் அமர்ந்திருப்பதால், இத்தேசங்களில் உற்பத்தியாகும் சாமான்கள் கையிருப்பு குறைந்துபோய் அவற்றின் விலையும் ஏறிநிற்கின்றது. துருக்கி சப்பல்படை பல்கேரியா துறைமுகங்களை முற்றுகை போட்டிருப்பதால் கோதுமைவியாபாரம் சின்னாபின்னப்பட்டுப்போயிருக்கிறதுமன்றி கையிருப்பும் குறைந்துபோய் விலையும் ஏறிநிற்கிறது. சண்டை நீடித்து நடக்குமாகில், இந்தியன், அர்ஜன்டயின், கனடியன், அமெரிக்கன் ஆகிய இந்த தேசத்தார்கள் தங்களுடைய கோதுமைக்கு விசேஷகிராக்கிகள் கிடைக்கப்பெற்றுப் பயனடைவார்கள். சிகரட்டுகளுக்குள் ஈஜிப்ட்தேசத்தில் செய்யப்படும் சிகரட்டுகள் மிகுந்த சிலாக்கியமானவை என்று எண்ணப்படுகின்றது. இந்த சிகரட்டுகளில் பிரயோகப்படுத்தப்படும் புகையிலைகள் துருக்கிதேசத்தில் பயிராகின்றன. ஆயிரக்கணக்கான ஜனங்கள் அந்தசாகுபடியில் அமர்ந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் தங்களுடைய இராஜ்ஜியத்தைக் காப்பாற்றுவதற்காக சண்டைக்குப்போயிருக்கிறார்கள். ஆதலால் ஈஜிப்ட் சிகரட்டுகளும் கிராக்கியாயிருக்கும்.

State Bank in India.

இந்தியா முழுமைக்கும் ஒரு கவர்ன்மெண்டு பாங்கி.

சென்னை பாங்கியையும், பங்காளா பாங்கியையும், பம்பாய் பாங்கியையும் ஆகிய மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்து ஒரு சர்க்கார் பாங்கியாகச் செய்துவிட்டால் நலமாயிருக்குமென்று லண்டன் டைம்ஸ் கூறுகின்றது.

Indo-German Trade.

இந்தியா ஜெர்மனி வியாபாரம்.

ஜெர்மனியிலிருக்கும் ஹாம்பர்க்கிற்கும் இந்தியாவிற்கும் வியாபாரநெருக்கம் அதிகபலத்து வருகின்றது. பிரிடிஷ் ஐக்கியநாடுகளுக்குள் இந்தியாவுடன்மட்டிலும் ஹாம்பரக் விசேஷமான வியாபாரம்செய்துவருகின்றது. வருஷங்களுக்குள் 100-க்கு 4 மடங்கு அதிகமாக இறக்குமதி வியாபாரம் செய்

துவங்கிருக்கிறது. பிரிடிஷ் இந்தியாவிலிருந்து அடியிற்கண்ட சாமான்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன:—பஞ்சு, சணல், அரிசி, அரக்கு, தேயிலை, தோல், தேங்காய், வாசனைச் சரக்குகள், எண்ணை, கொப்பரை. முதலியன. அடியிற்கண்ட சரக்குகள் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன :—பீர், சாயச்சரக்குகள், இரும்புக் கம்பிகள், சுருள் இரும்பு தகடுகள், செம்பு, நூல், கால்சிராய், பஞ்சால் செய்யப்பட்ட சாமான்கள், கடுதாசி, இரும்பு சாமான்கள், விளையாட்டு சாமான்கள். இந்தியாவிலிருந்து ஜெர்மனிக்கு விசேஷமான சரக்குகள் ஏற்றுமதிசெய்யப்படுகின்றன வென்பதில் சந்தேகமில்லையாயினும், இவைகள் எல்லாம் பெரும்பாலும் இயற்கையில் உற்பத்தியாகும் சமான்கள். அவைகளை வேலைசெய்து அன்னியதேசத்தாருக்குத் தேவையுள்ள சாமான்களாகத் தயார்செய்து அனுப்பிவிக்கக்கூடிய முதலாளிகள் நம்மிந்தியாவில் யாருமில்லையோ?

Aluminium.

அலுமினியம்.

அலுமினியம் ரப்பர் உருவுகளுக்குப்பதிலாக லாபகரமாக உபயோகப்படுத்தப்பட்டுவரலாமென்றும், அது துருப்பிடிக்காததால் உள் கால் சிராயை (Trousers) இருக்குவதற்காக உபயோகப்படுத்தலாம். காற்று மெத்தைகளுக்கு ஸ்கிரீன்களாகவும் வென்னீர்குப்பிகளுக்கு மூடிகளாகவும் (stoppers) வண்டிச்சக்கரங்களுக்கு ரப்பர்டையர்களுக்குப் பதிலாகவும் பிரயோகப்படுத்தப்பட்டுவரலாம். ரப்பர் கைத்தொழிலில் அலுமினியம் இன்னும் பலவிதமாகப் பிரயோகப்படுத்தப்பட்டு வரலாம் என்று சொல்லப்படுகிறது.

Government Scholarship for Technical Education.

கைத்தொழில் படிப்பிற்கு உபகாரப் பணம்.

கவர்ன்மெண்டார் கைத்தொழில் படிப்பை இங்கிலாண்டு தேசத்தில்போய்ப் படித்துக்கொண்டு வரும்பொருட்டு வருஷவாரி ஒரு மாணாக்கனுக்கு உபகாரப்பணம் கொடுத்து உதவிபுரிகிறார்கள். இந்த வருஷத்திற்கு அந்த உபகாரப்பணத்தை தோல் சாமான்கள் செய்யும் தொழிலை கற்றுக் கொள்ள விரும்புகிற மாணாக்கருக்கு கொடுக்கப் படுமென்றும் வருஷம் ஒன்றுக்கு 150 பவுன் உபகாரப்பணம் கொடுக்கப்படுமென்றும், அந்த உபகாரப்பணத்தை அடையவிரும்பும் மாணாக்கர் சர்வகலாசாலை பரிக்ஷைகளில் தேர்ந்திருக்கவேண்டுமென்றும், இரண்டுவருஷத்திற்கு குறையாதபடி இங்கிலாண்டில் தங்கிக் கற்றுக்கொள்ளவேண்டுமென்றும் அபேக்ஷையுடையவர்கள் சென்னை ராஜதானி Director of Public Instruction என்கிற வித்தை இலாக்காத்தலைவருக்கு விண்ணப்பம் அனுப்பவேண்டுமென்றும் கவர்ன்மெண்டு கெஜெட்டில் பிரசுரஞ் செய்திருக்கிறார்கள்.

Cablegram : New Route.

சமுத்திரத்தில் புதிய தந்திமார்க்கம்.

இங்கிலாண்டிலிருக்கும் "லாண்ட்ஸ் எண்ட்" ஊரிலிருந்து சீனா தேசத்திலிருக்கும் ஹாங்காங் என்கிற துறைமுகத்திற்கு சமுத்திரத்தின்வழியாக ஒரு புதிய தந்தி மார்க்கம் ஸ்தாபிக்கப்படப்போகிறதாக "சிலோன் டைம்ஸ்" என்கிற பத்திரிகை கூறுகின்றது. அந்த புதிய மார்க்கத்தினால் உண்டாகக் கூடிய நன்மை என்னவென்றால், கொளும்பு துறைமுகத்திலிருந்து லண்டனுக்கு அனுப்பப்படக்கூடிய தந்தி நேரே 10 நிமிஷத்தில் லண்டனுக்குப்போய்ச் சேரும். இப்போதுள்ள மார்க்கப்படி லண்டனிலிருந்து ஒரு தந்தி பம்பாய்க்கு அனுப்பினால், அது லிஸ்பன், மால்ட்டா, அலக்சாண்டிரியா, ஏடன் ஆகிய இந்த துறைமுகங்களில் தங்கி கடைசியாக பம்பாயிக்கு வந்து சேருவதற்கு 2½ மணி நேரம் பிடிக்கின்றது.

இப்போது ஸ்தாபிக்கப்படப்போகிற புதிய மார்க்க மூலியமாக ஹாங்காங் துறைமுகத்திலிருந்து லண்டனுக்கு தந்தி அனுப்பினல், ஹாங்காங்கிலிருந்து கொழும்பிற்கு அனுப்பப்பட்டு கொழும்பிலிருந்து நேரே லண்டனுக்குப்போய்விடுகின்றது.

Electric Railway.

மின்சார ரயில்.

பம்பாயிலும் சுற்றுப்புரங்களிலும் மின்சாரத்தால் ஓடக்கூடிய இருப்புப்பாதைகள் போடுவதற்காக ஆரம்பவிசாரணைகள் செய்யப்பட்டுவருகின்றன.

Fire-Proof Buildings.

தீப்பிடிக்க முடியாத கட்டடங்கள்.

இவைகள் உலோகங்களால் அமெரிக்காவில் செய்யப்பட்டுவருகின்றன. சிறிய ஆபீஸ்கள் வைத்துக்கொள்ளவும், ஸ்டோர்கள் செய்யவும், வண்டிகள் நிறுத்தவும்,—ஆகிய இந்த காரியங்களுக்கு இந்தக்கட்டடத்தை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இந்தக்கட்டடம் எந்த சமயம் வேண்டுமானுலும் பிரிக்கப்பட்டு இஷ்டப்பட்டவிடத்திற்குக் கொண்டுபோகப்படக்கூடியதாம். இந்த கட்டடங்களைத்தருவித்து வியாபாரஞ்செய்ய இஷ்டமுடையவர்கள் பம்பாயிலிருக்கும் அமெரிக்கா கான்சலுக்கு எழுதித் தெறிந்துகொள்ளலாம்.

Blotting-Paper.

பிளாட்டிங் பேபர்.

இங்கிலாண்டு, ஜெர்மனி, ஆஸ்டிரேலியா முதலியவிடங்களுக்கு பிளாட்டிங்பேப்பர் அனுப்பி பெரிய வியாபாரம் செய்யும் ஒரு அமெரிக்கா வியாபாரி, இந்தியா தேசத்தில் இந்த வியாபாரத்தை விருத்திபடுத்தக்கூடியவர்களுடைய சம்பந்தத்தை விரும்புகின்றார்.

உயர்ந்த பிளாட்டிங்பேப்பர் மாதிரியும் மற்ற விபரங்களும் பம்பாயிலிருக்கும் அமெரிக்கா கான்சல் ஆபிசில் கேட்டு விளங்கத் தெறிந்துக்கொள்ளலாம்.

MERCANTILE LAW.

வியாபார சம்பந்தமான சட்டம்.

சென்னபட்டணம் ஐக்கோர்ட்டு முதலாவது கிரிமினல் செஷன்ஸ்.

Port Trust Case.

போர்ட் டிரஸ்ட் கேஸ்.

ஜட்ஜி: மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்.

விசாரணைத்தேதி: 19-2-1913.

குற்றம் சாட்டப்பட்டவர்கள்:—(1) கலியாணி புக்ஷ் பண்டாரி; (2) ரத்தினம்.

குற்றங்கள்:—(1) 1912 மார்ச்சுமீ 29வ, முதல் குற்றவாளி சப்பல் ஆபிசருடைய போர்ஜரி செய்யப்பட்ட இரண்டு ரசீதுகளை, போர்ஜரி செய்யப்பட்டவை என்று தெரிந்திருந்தும் உண்மையானவைபோல் உபயோகப்படுத்தியிருக்கிறான். (2) 145 மூட்டைகள், தான், ஸ்டீமரில் ஏற்றவில்லை என்று தனக்குத் தெரிந்திருந்தும் 145 மூட்டைகளுக்கு பில் ஆப் லேடிங் (Bill of Lading) பிறப்பிக்கும்படியாக மோசடியாகவும் அயோக்கியத்தனமாகவும் மெசர்ஸ் பின்னி கம்பெனியாரைத் தூண்டி அதேவிடத்தில் அதேகாலத்தில் அவர்களை மோசம் செய்திருக்கிறான். (3) 145 மஞ்சள் மூட்டைகள், தான் ஸ்டீமரில் முந்தியதினம் ஏற்றியிருப்பதாக மோசடியாகவும் அயோக்கியத்தனமாகவும் ஸீகஸ்டம் ஆபிசில் டயிட்வெயிட்டர் என்கிற உத்தியோகத்திலிருக்கும் பழனி முதலி என்பவனுக்குச்சொல்லி ஷிப்பிங் பில் என்கிற கணக்கில் எழுதப்பட்டிருந்த 130 என்கிற எண்ணுடன் 15 சேர்த்து அந்த பில்லை மாற்றும்படி அதேவிடத்தில் அதேகாலத்தில் தூண்டி மோசஞ் செய்திருக்கிறான்.

இரண்டாவது குற்றவாளி அதேவிடத்தில், (1) அதேகாலத்தில், 130 மஞ்சள் மூட்டைகளுக்கும், 15 மஞ்சள் மூட்டைகளுக்கும் பொய்யான ஷிப்பிங் பாசுகள் செய்வதற்காக முறையே போர்ஜரி செய்திருக்கிறான். (2) மோசம்செய்வதற்கு உபயோகப்படுத்தவேண்டுமென்கிற எண்ணத்துடன் அந்த ஷிப்பிங் பாசுகளை போர்ஜரி செய்திருக்கிறான். (3) அவன் போர்ட்டிரஸ்ட் ஆபிசில் கிளர்க்காக விருந்துகொண்டு, கப்பலுக்குச்சாமான்கள் ஏற்றும் கணக்கு புஸ்தகத்தில் "120" மூட்டைகள் என்று எழுதப்பட்டிருந்ததை "130" என்று மாற்றி தப்புப்பதிவு செய்திருக்கிறான். (4) சென்னபட்டணம் போர்ட்டிரஸ்ட் ஆபிஸ் கார்கோ புக் (Cargo Book) என்கிற கணக்கு புஸ்தகத்தில் 15 மூட்டைகள் என்று தப்பான பதிவு செய்திருக்கிறான்.

ஜூரர்கள்:—(1) மிஸ்டர் H. H. பிச்னல், போர்மன்; மெசர்ஸ் E. கோம்பிரிட்ஜ், P. T. சீனிவாசாச்சாரியார், M. S. வெங்கடராமய்யர், B. ராமராவ், A. T. லூக்கர், T. கூரத்தாழ்வார் செட்டி, E. S. சுந்திரமய்யர், P. C. மோல்.

லாயர்கள் :—கவர்ன்மெண்டிற்காக கிரவுன்பிராசிகியூட்டரும், அவருடன்கூட கவர்ன்மெண்டாருடைய உத்திரவின்பேரில் பாரிஸ்டர் ஜான் C. ஆடமும் ஆஜரானார்கள். பாரிஸ்டர் மிஸ்டர் E. R. ஆஸ்பர்னும், வக்கீல் மிஸ்டர் சல்லா குருசாமி செட்டியும் முதல் குற்றவாளிக்கும், வக்கீல் மிஸ்டர் P. சுப்பிரமணியம் இரண்டாவது குற்றவாளிக்கும் ஆஜரானார்கள்.

மெசர்ஸ் கிங் அண்டு பாட்ரிட்ஜ் என்கிற சொலிசிட்டர் கம்பெனியார் போர்ட் டிரஸ்ட் ஆபிஸ் தரப்பிற்காக கேசை கவனித்துவரும்படி ஆஜரானார்கள்.

கேசின்விபரம்:—பிராசிக்யூஷன் தரப்பிற்கு ஆஜரான பாரிஸ்டர் மிஸ்டர் ஆடம் அடியிற்கண்டபடி கேசின் விபரத்தை ஜூரர்களுக்கு எடுத்துச் சொன்னார் :—

முதல் குற்றவாளி கல்கத்தாவிலிருக்கும் பாரி வர்த்தக கம்பெனியாருடைய சென்னபட்டண ஏஜண்டு. கல்கத்தாவிலிருக்கும் முதலாளிக்குச் சரக்கு அனுப்புவது இவ்விடத்தில் அவருக்குவேலை. இரண்டாவது குற்றவாளி சென்னபட்டணம் போர்ட் டிரஸ்ட் ஆபிசில் அசிஸ்டண்ட் செக்ஷன் மாஸ்டர் உத்தியோகத்திலிருக்கிறார். முதல் குற்றவாளி "மொம்பாசா" ஸ்டீமரில் 120 மஞ்சள் மூட்டைகள் ஏற்றி ஸ்டீமர் அதிகாரியிடமிருந்து ரசீதுபெற்று மொத்தத்தில் 145 மூட்டைகள் ஏற்றினதுபோல் ரசீதை போர்ஜரிசெய்தார். இரண்டாவது குற்றவாளி, பிராசிகியூஷன் தரப்பு சாக்ஷியின்படி ஷை முதல் குற்றவாளிசெய்த மோசம் செய்கைக்கு அனுகூலமாகவிருந்து போர்ட்டிரஸ்ட் ஆபிசினுடைய புஸ்தகங்களில் சில திருத்துப்பாடுகள் செய்தார். இந்தமோசம் அடியிற்கண்டபடி வெளியில் வந்தது. ஸ்டீமர் துறைமுகத்தைவிட்டுப் போய்விட்டது. கல்கத்தாவில் உண்மையாய் 120 மூட்டைகள்தான் ஒப்புவிக்கப்பட்டன. ஆகையால் முதலாளி கம்பெனியார்கள், குறைந்துபோன 25 மூட்டைகளுக்குக்கிரயம் கேட்டார்கள். 120 மூட்டைகள் தான் ஏற்றுமதி செய்யப்பட்டனவென்று பிராசிகியூஷன் தரப்பார் ருஜூப்படுத்தத் தயாராகவிருக்கிறார்கள். நிற்க, முதல் குற்றவாளியும், இப்போது இந்த கேசில் மூன்றாவது குற்றவாளியாகவும் மறைந்துகொண்டுமிருக்கிறவுமான பீட்டர்ஸ் என்பவனும், ஷை 25 மூட்டைகள் விஷயமாக நடத்தின மோசத்தை ரகசியமாகப்பேசிக்கொண்டிருந்தார்கள். இந்தக்கேசில் பிராசிகியூஷன் சாக்ஷியாகவிருக்கும் சிவப்பிரகாசம் என்பவர் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார். இவர் உடனே மிஸ்டர் மார்ட்டினிடம் சொல்ல மிஸ்டர் மார்ட்டின் மெசர்ஸ் பின்னி கம்பெனியைச்சேர்ந்த மிஸ்டர் ஸ்வேர்ட்டிற்குச் சொல்ல, மோசம் வெளிப்பட்டு விசாரணைக்கு வந்தது.

முதல் குற்றவாளியின் டிபன்ஸ் :—ஏதேனும் மோசம் நடந்திருந்தால் தனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்றும், தான் ஏற்றினது 145 மூட்டைகள்தான் என்றும் ரேவு துறையில் 25 மூட்டைகள் பதியவைக்கப்படாமல் விட்டுப்போய்விட்டால் தான் அதற்கு ஜவாப்புதாரியல்லவென்றும் சொல்கின்றார்.

இரண்டாவது குற்றவாளியின் டிபன்ஸ் :—போர்ட்டிரஸ்ட் ஆபீஸ் கணக்குகளில் அடித்தும் மறுபடி எழுதுவதும் சாமானிய வழக்கமென்றும்,

அப்படி ஏதேனும் அடித்து எழுதப்பட்டிருந்தால் உண்மையாய் எழுதப்பட்டதே ஒழிய மற்றப்படி அதில்யாதொரு வித்தியாசமான எண்ணமுமில்லை என்றும் சொன்னர்.

இதன்பேரில் கிரவுன் பிராசிகியூட்டர் பிராசிகியூஷன் தரப்பு சாக்ஷிகளை விசாரணை செய்ய ஆரம்பித்தார். பிப்ரவரி௴ 20௳, 21௳ ராமசாமி அய்யங்கார் எட் காஷியரும், அசிஸ்டன்ட் காஷியர் அப்பாத்துரை முதலியும், செக்ஷன் கிளார்க் சோமசுந்திர முதலியும், வர்த்தகர்கள் கப்பலில் சரக்கு ஏற்றும்போது போர்ட் டிரஸ்ட் ஆபீசில் அனுஷ்டிக்கவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி பேசினர்கள்.

போர்ட்டிரஸ்ட் கேட்டுகளின்வழியாக சரக்குகளைவிட்ட கேட்டு கிளார்க்கு பிறகு விசாரணை செய்யப்பட்டார். தன்னுடன் இருக்கும் ஜாப்தாவில் 120 மூட்டை மஞ்சள் என்று தான் பதிவாயிருந்ததென்றும் பிறகு 130 என்று திருத்தப்பட்டிருந்ததென்றும் சொன்னர். (இரண்டாவது பிரதிவாதியின் வக்கில் குறுக்குக்கேள்விக்கு) சரக்கு, அனுப்பிவிப்பவர்களுடைய ஏற்றுமதிச் சரக்கு,தானிருக்கும்படியான ஒரே கேட்டின் வழியாகத்தான் அனுப்பப்படுகிற வழக்கம் என்றும் தினம் ஒன்றுக்கு 10-க்கு குறையாமலும் 20-க்கு மேற்படாமலும் கேட்பாஸ்கள் வருமென்றும், E எக்சிபிட்டில் காணப்படும் C. R. R. என்கிற குறிப்புகள் என்னுடைய உதவி உத்தியோகஸ்தருடைய கையெழுத்து என்றும், எக்சிபிட்டில் காணப்பட்டிருக்கும் தேதி என்னுடைய கையெழுத்தாகவிருந்தாலுமிருக்கலாம் அல்லது என்னுடைய அசிஸ்டன்ட் உத்தியோகஸ்தரின் கையெழுத்தாகவிருந்தாலுமிருக்கக்கூடும் என்றும் சொன்னர்.

பிப்ரவரி௴ 22௳ புரூரன் செட்டியார் குமாஸ்தா துரைசாமி என்பவன் கூப்பிடப்பட்டான். தன்னுடைய படகில் "மொம்பாசா" ஸ்டீமருக்கு 120 மூட்டைகள்தான் ஏற்றி அனுப்பப்பட்டனவென்று சொன்னர். நாவிகேஷன் பிரிடிஷ் இண்டியன் ஸ்டீம் கம்பெனியின் கல்கத்தா ஆபிசின் எட்கிளார்க்கு மிஸ்டர் E. ஆக்கின், 120 மூட்டைகள் தானிருந்தனவென்றும் டாலி ரசிதில் (Tally Receipt) 25 மூட்டைகள் குறைவாகக்காணப்பட்டனவென்றும் சரக்கைப்பெற்றுக்கொள்ளவேண்டியவர்கள் குறைந்துபோனதாகச் சொல்லப்படும் மூட்டைகளுக்கு ரூ. 454 ரொக்கம் கேட்கிறார்கள் என்றும் சொன்னர்.

மெசர்ஸ் பின்னி கம்பெனியின் டாலி கிளார்க்கும் சாக்ஷி சொன்னர். இந்தக்கேசில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பல தஸ்தாவேஜிகளில் காணப்படும்பதிவுகள் உண்மையானவையா என்பதைப்பற்றிச்சொன்னர். பிராசிகியூஷன் தரப்பிற்கு கடைசி சாக்ஷி மிஸ்டர் செயல்பெல்ட். இவர் குற்றம் நடந்தகாலத்தில் அசிஸ்டன்ட் செக்ஷன்மாஸ்டர் உத்தியோகத்திலிருந்தவர்.

இவர் பிராசிகியூஷன் தரப்பிற்கு சாக்ஷி சொல்லி முடிந்த பின்பு கடுமையான குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அதில் கடந்த அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் பாம்பே கம்பெனியார் ரெங்கூனிலிருந்து சென்னைக்கு அனுப்பிய தேக்குமரவிஷயமாக ஏதோ ஒரு மூடப்பட்ட தஸ்தாவேஜியில் திருத்துப்பாடுசெய்ததற்காக போர்ட் ஆபிசின் உத்தியோகத்திலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டதாகச்சொன்னர்.

இதன்பேரில் குற்றவாளிகள் கீழ்க்கோர்ட்டில் எழுதிவைத்த வாக்குமூலங்கள் ஜூரர்களுக்கு வாசித்துக்காண்பிக்கப்பட்டன.

டிபன்ஸ்தரப்பிற்கு ஆஜரான பாரிஸ்டர் மிஸ்டர் ஆஸ்பர்ன் தம்முடைய கக்ஷிக்காரனுகிய முதல் குற்றவாளி தகுந்த வர்த்தகரென்றும், வருஷத்தில் 4 லக்ஷ ரூபாய் மதிப்புள்ள சரக்குகள் ஏற்றுமதி செய்துவருகிறுரென்றும், இந்த வேலையெல்லாம் கன்டிராக்ட்டர் புரூரன் செட்டியார் மூலியமாக நடந்து வருகிறதென்றும், இந்த செட்டியாருடைய குமாஸ்தாவாகிய கோவிந்தராஜுலு என்பவன்தான், ரேவு துரை சம்பந்தமான வேலைகளைப் பார்த்து வருகிறவன் என்றும் 150 மூட்டைகள்தான் உண்மையில் ஏற்றப்பட்டனவென்றும் ஆனுல் ரசிதில் 120 மூட்டைகள் என்று காணப்பட்டிருந்த திருத்துப்பாடு கோவிந்தராஜுலுவால் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்றும் எடுத்துப்பேசினர்.

இரண்டாவது குற்றவாளிக்காக ஆஜரான மிஸ்

டர் P. சுப்பிரமணியம் தம்முடைய கக்ஷிக்காரனுக்கு நடேசன் என்றும் பெயர்கொண்ட கீழ் உத்தியோகஸ்தனிருக்கிறுன் என்றும் அவன் பேச்சை நம்பி வில்லங்கத்தில் அகப்பட்டுக்கொண்டார் என்றும் சொன்னர். கப்பலில் 120 மூட்டைகள் ஏற்றப்பட்டனவென்று முதலிலும், பிறகு 130 என்றும் நடேசன் சொன்னன். ஆகையால் முதல் குற்றவாளி 120 யை 130 ஆக மாற்றினர். இராத்திரி வேறே 15 மூட்டைகள் ஏற்றப்பட்டனவென்றும் மறுநாள் காலையில் தெரிவித்தான் என்றும் பேசினர்.

ஜட்ஜி கேசின் சாராம்சத்தை ஜூரர்களுக்கு எடுத்துச்சொன்னவுடன் ஜூரர்கள் ஆலோசனைக்குச் சென்று திரும்பிவந்து முதல் குற்றவாளி 1, 2, குற்றங்கள் சம்பந்தபட்டவரையில் 6 ஜூரர்கள் குற்றவாளியல்லவென்றும், 3-வது குற்றப்சம்பந்தப்பட்டவரையில் ஏகோபித்து குற்றவாளியல்லவென்றும் அபிப்பிராயம் கூறினர்கள். எல்லாக்குற்றங்கள் சம்பந்தமாகவும் இரண்டாவது குற்றவாளி குற்றவாளியேயல்லவென்று ஏகோபித்த அபிப்பிராயம் கூறினர்கள்.

தீர்ப்பு :—கோர்ட்டார் ஜூரர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு இரண்டு குற்றவாளிகளையும் விடுவிக்கும்படி உத்திரவு செய்துவிட்டார்கள்.

Insurance Company Case.

இன்ஷூரன்ஸ் கம்பெனி கேஸ்.

ஜட்ஜிகள் : மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்; மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.

கேசின் விபரம்:—சென்னையிலிருக்கும் ஓரியான்டல் லயிப் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட் என்கிற கம்பெனியில் ஒருவர்தநகர் தம்முடைய ஆயுளை ரிஜிஸ்டர் செய்து வைத்தார். ரிஜிஸ்டர் செய்துவைக்கும்போது தாம் இறந்துபோன பின்பு தம்முடைய குழந்தைகளுக்கும் மனைவிக்கும் தொகை கொடுக்கப்படவேண்டுமென்று எழுதி வைத்திருந்தார். இவர் இறந்துபோனபின்பு இவருடைய கடன்காரர்கள் ஷை கம்பெனியிலிருக்கும் இவருடைய பணத்தை ஜப்திசெய்தார்கள்.

இறந்துபோனவருடைய புத்திரி ஜப்தி செய்யப்பட்டிருக்கும் தொகையில் தனக்குள்ள பாகம் ஜப்தி செய்யப்படக்கூடாதென்றும், ஆதலால் தனக்குக் கிடைக்க வேண்டுமென்றும் முனிஸிப்பட்டணம் டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தாள்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

ஆகவே கடன்காரன் கிருஷ்ணு ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு :—*இ. லா ரி. 35 சென்னை 16ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் கேசில் ஜட்ஜி மிஸ்டர் பென்சனும் ஜட்ஜி மிஸ்டர் சுந்திரய்யரும் எடுத்துக்கூறியிருக்கும் தீர்ப்பைப் பின்பற்றி, கம்பெனியார்வசமிருக்கும் தொகை ஒப்பந்தப்படி புத்திரர்களுக்குச் சேரவேண்டுமென்றும், தகப்பனுடைய கடனுக்காக புத்திரர்களுக்குச்சேரவேண்டிய தொகை ஜப்திசெய்யப்படலாமென்றும் டி. மு. கோர்ட்டு டிக்கிரியை ரத்துசெய்து பிரதிவாதி பக்கம் தீர்ப்பு சொன்னர்கள்.

ஆகவே வாதி ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் தாக்கல் செய்தனள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் V. ருமதாசும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் T. ருமச்சந்திர ராவும் ஆஜராஞர்கள்.

கோர்ட்டார் உத்திரவு :—35 சென்னை 16ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் தீர்ப்பு புனராலோசனை செய்யப்படக்கூடியதாகவிருப்பதாலும், மேலும் இந்தக் கேசில் உண்டாயிருக்கும் பிரஸ்னை மிக முக்கியமாக விருப்பதாலும், இந்தக்கேசை புல்பெஞ்சின் அபிப்பிராயத்திற்கு அனுப்பும்படி உத்திரவு செய்திருக்கிறர்கள்.

* இந்தியன் லா ரிபோர்ட்ஸ்.

Honouring Hundies.

உண்டிகளை கௌரவப்படுத்தல்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங், மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

அப்பீல் நெ. 84 of 1909.

M. வெங்கட்ரத்தினம் வகையரு—அப்பீல் வாதிகள்.

T. ருஜய்யா வகையரு—அப்பீல் பிரதிவாதிகள்.

கேசின் விபரம்:—K என்பவர் V என்பவர் பேரில் உண்டி எடுக்கிறதுண்டு. V என்பவரும் அந்த உண்டிகளை கவரப்படுத்துவதுமுண்டு. தாவா உண்டிகள் அவருக்கு R என்பவரால் காண்பிக்கப்பட்டன. உண்டிகள் தரிசன உண்டிகளாகயிருந்த போதிலும் V என்பவர் அதற்கு உடனே பணம் கொடுக்காமல், கொடுத்துவிடுவதாக 3 அல்லது 4 நாள்கள்வரையில் கெடுவு சொல்லிக்கொண்டு வந்தார். கடைசியில் கொடுக்கவில்லை. ஆகவே V என்பவர்பேரில் உண்டியில் கண்டதொகைக்கு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். உண்டிக்குப்பணம் தருவதாய் 3 அல்லது 4 தினங்கள் புகல் சொல்லிக்கொண்டு வந்தது உண்டியை ஒப்புக்கொண்டு விட்டமாதிரி என்றும், மேலும் R என்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் அட்வான்சுத்தொகைகளுக்கு K என்பவர் V என்பவர்பேரில் உண்டியெடுத்தால் இந்த உண்டிகளை கவரவப்படுத்த V என்பவர் கட்டுப் பட்டவர் என்றும் ஆதலால் இந்த இரண்டில் ஒன்றை வியாஜ்ஜியமூலமாக வைத்துக் கொண்டு இந்த வியாஜ்ஜியம்கொண்டுவரப்பட்டது.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள். ஆகவே பிரதிவாதி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—உண்டி யார் பெயரால் எடுக்கப்பட்டதோ, அவர் அதற்குப் பணம்கொடுக்காமல் போய்விட்டால், உண்டியைக்கொண்டு வந்தவன் 3 அல்லது 4 தினங்கள்வரையில் காத்திருக்கும் பணம் கொடுபடாததை முன்னிட்டு அந்த உண்டியைத் தூக்கினவனிடம் அனுப்பிவிடுகிறது வழக்கமென்றும், உண்டிகொண்டு வந்தவன் உண்டி யார் பெயரால் எடுக்கப்பட்டதோ அவனைப் பணம் செலுத்தும்படியாக கட்டாயப்படுத்துகிறது வழக்கமில்லை என்றும் சாக்ஷி வாக்குமூலத்தால் ருஜுப்படுகிறது. ஆதலால் V என்பவர் 3 அல்லது 4 தினங்கள் வரையில் பணம் செலுத்துவதாகச் சொன்னது உண்டியை ஒப்புக்கொண்டதற்குச் சமம் என்கிற வாதி சொல்லும் சக்ஷியை ஒப்புக்கொள்ள முடியாது. இரண்டாவது K எடுக்கும் உண்டிகளை எல்லாம் V என்பவர் கௌரப்படுத்தக் கட்டுப்பட்டவர் என்பதற்கு இந்தக்கேசில் ருஜுவில்லை. ஏற்பட்டிருக்கும் ருஜுவெல்லாம் கூடி V என்பவர் தனக்கு சௌகரியப்பட்டால் K எடுக்கும் உண்டிகளுக்குப்பணம் செலுத்துவார் என்பதே ஒழிய V கட்டுப்பட்டவர் என்பதற்குப்போதுமான ருஜுவில்லை. ஆகையால் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருடைய தீர்ப்பை ரத்துசெய்து வாதியின் வியாஜ்ஜியத்தை செலவுதொகையுடன் தள்ளுபடிசெய்கின்றோம்.

Privy Council Decisions.

பிரிவி கவுன்சிலில் ஜாரிசெய்யப்பட்ட தீர்ப்புகள்.

பிரிவி கவுன்சில் ஜட்ஜிகள்:—

லார்ட் மக்நாட்டன்.
லார்ட் அட்கின்சன்.
லார்ட் ஷா.

Valid Pledge of Cotton Bales.

பஞ்சு மூட்டைகளின் செலாமணியாகக் கூடிய அடமானம்.

பம்பாய் பாங்கி—அப்பீல் வாதிகள்.
நாண்ட் லால்—அப்பீல் பிரதிவாதி.

கேசின் விபரம்:—வாதியாகிய T என்பவர் தம்முடைய பண்டகைசாலைக்காரராகிய L என்பவரிடம் 399 பஞ்சு மூட்டைகள் ஒப்புவித்தார். இவர் பம்பாய் பாங்கியில் அவைகளை அடமானம் வைத்து பணம் வாங்கினர். பாங்கி அதிகாரிகளுக்கு L என்பவர் பண்டகசாலைக்காரர் என்று தெரியமாட்டாது. பாங்கியில் பத்துவரவுசெய்கிறவர்களுடைய யோக்

கியதாபக்ஷங்களை விசாரணைச் செய்யக்கடமைப்பட்ட உத்தியோகஸ்தனுக்கு L என்பவர் பண்டகசாலைக் காரர் என்றும், அதனுடன்கூட பஞ்சுவர்த்தகம் செய்துவருகிறார் என்றும் தெரியும். ஆனால் L என்பவர் பண்டகசாலைவைத்து வருவதை அந்த உத்தியோகஸ்தன் பாங்கியாருக்குத்தெரியப்படுத்தாமல் L என்பவருக்கு உடந்தையாகவிருந்தான். சிலமாதங்கள் சென்றபிறகு L என்பவர் மேற்படி மூட்டைகளை ஒரு வர்த்தகனுக்கு கிறயம்செய்து அவனிடம் அந்த மூட்டைகளை ஒப்புவித்துவிடும்படியாக பாங்கியாருக்கு எழுத்துமூலமான தாக்கல் கொடுத்தார். பாங்கியார் அப்படியே மூட்டைகளை அவ்வர்த்தகனுக்கு ஒப்புவித்துவிட்டார்கள். L என்பவன் இன்சால்வென்டு பெற்றுக்கொண்டான்; மேலும் இப்போது சிக்ஷை அடைந்து கிரிமினல் ஜெயிலிலுமிருக்கிறான். மூட்டைகளுக்குச் சொந்தக்காரனாகிய T என்பவன் பாங்கில்வைத்த அடமானம் செல்லுபடியுள்ள அடமானமல்லவென்றும், தமக்கு மூட்டைகளாவது அல்லது அவற்றின் கிறயமாவது கிடைக்கவேண்டுமென்றும் பாங்கியை முதல் பிரதிவாதியாகவும், L என்பவரை இரண்டாவதுபிரதிவாதியாகவும் சேர்த்து பம்பாய் ஐகோர்ட்டு அசல் தரப்பில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

வாதி தம்முடைய பிரியாதில் இன்னொரு பரிகாரமும் கேட்டிருந்தார். அதாவது என்னவென்றால், பாங்கியார் பேரில் டிக்கிரி கொடுக்கப்படாமல் போய்விட்டால், பாங்கியாரிட மிருக்கும் L என்பவரின் ஜாமின்பணம் தம்மிடம் கொடுக்கப்படும்படி உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்.

அசல் கோர்ட்டுத் தீர்ப்பு;—L என்பவன் ஒழுங்கீனமான சந்தர்ப்பங்களுடன் மூட்டைகளை அடமானம் வைத்தது பாங்கிக்காரருக்குத் தெரியாது. வர்த்தகர்களுடைய யோக்கியதாபக்ஷங்களை விசாரணை செய்யக் கடமைப்பட்ட பாங்கியின் அதிகாரி வேணுமென்று அயோக்கியத்தனமாய் Lன் உண்மையான நிலைமையை பாங்கியாருக்கு அறிவிக்காத குற்றம் பாங்கியாரை இந்தியன் ஒப்பந்தச் சட்டம் 229 - வது பிரிவின்படி பொறுக்கமாட்டாது. அப்படி பொறுக்குமென்று சொல்லலாமென்றாலும், பாங்கியாரும் வாதியும் மிகுந்த லாவாதேவி உடையவர்களானபடியால் இந்தியன் ஒப்பந்தச்சட்டம் 178-வது பிரிவின்படி சந்தேகிப்பதற்கும் போதுமான ஆதாரமில்லை. அடமானம் வைக்கப்பட்ட மூட்டைகள் வாதியுடையன வென்று பாங்கியாருக்குத் தெரிவதற்கு முந்தி L என்பவர் சரக்குகளை பாங்கியாரிடமிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார் என்று விசாரணையில் பாங்கியார் ருஜுப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் அடமானம் செல்லுபடியுள்ள அடமானமென்று தீர்மானித்து பாங்கி சம்பந்தப்பட்டவரையில் வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

வாதி ஐகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

அப்பீல் கோர்ட்டுத் தீர்ப்பு :—பாங்கி அதிகாரி L என்பவன் பண்டகசாலைக்காரன் என்று தெறிவிக்காத குற்றம் பாங்கிக்கு சம்பந்தமில்லை என்று சொல்லமுடியாது என்று இரண்டு பிரதிவாதிகளின் பேரிலும் டிக்கிரி கொடுக்கப்பட்டது.

பாங்கியார் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொண்டார்கள்.

பிரிவி கவுன்சிலின் தீர்ப்பு:—L என்பவன்பேரில் கொஞ்சமேனும் சந்தேகப்படாதபடி பாங்கியார் இந்த அடமான விவகாரத்தை நடத்திவந்திருக்கிறார்கள் என்று ருஜுப்பட்டிருக்கிறது. L என்பவர் பாங்கியாருடன் பலதடவை பலசந்தர்ப்பங்களில் பத்துவரவு செய்து ஒழுங்காய் நடந்துகொண்டுவந்தவரானபடியால், அவர் பண்டகசாலைக்காரனாகவுமிருப்பது பாங்கியார் அறிந்துகொண்டிருந்தபோதிலும், அவன்பேரில் சந்தேகப்படமாட்டார்கள். நல்ல நாணயத்தையும், யோக்கியதையுமுடைய ஒருவன் அயோக்கியத்தன்மையான செய்கையைச் செய்வதற்கு வசதியுள்ள ஒரு ஸ்தானத்திலிருப்பதை முன்னிட்டு, அவன்பேரில் எவரும் சந்தேகப்படமாட்டார்கள் என்று சொல்லி கீழ் அப்பீல் கோர்ட்டார் பாங்கியின் பேரில் கொடுத்த டிக்கிரியை ரத்து செய்து அசல் கோர்ட்டுத் தீர்ப்பை உறுதிப்படுத்தினார்கள்.

பிரிவி கவுன்சில் ஜட்ஜிகள் :—

லார்ட் மக்நாட்டன்.
லார்ட் முல்டன்.
சர் ஜான் எட்ஜ்
மிஸ்டர் அமீர் ஆலி.

Deposit of Policy.

பாலிசியை ஈடுவைத்த கேஸ்.

முல்ராஜ் கட்டாலா :—அப்பீல் வாதி.

விஸ்வநாத பி. வைத்தியா—அப்பீல் பிரதிவாதி.

கேசின் விபரம் :—D என்பவன் தன்னுடைய ஆயுளை ஒரு லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனியில் ரிஜிஸ்டர் செய்து வைத்திருந்தான். V என்பவரிடம் கடன் வாங்கியிருந்தான். அந்தக் கடனுக்கு ஈடாக V என்பவரிடம் தன்னுடைய லைப் இன்ஷூரன்ஸ் பாலிசியை டிபாசிட்டாக வைத்திருந்தான். ஆனால் எழுத்து மூலமான ஆதரவு இல்லை. D என்பவன் K என்பவரிடமிருந்து விசேஷமான கடன் வாங்கியிருந்தான். K நெருக்கவே, D என்பவன் அந்த பாலிசியை அவனுக்கு கிரயம் செய்து விட்டான். கிரய தஸ்தாவேஜும் ஏற்பட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. D என்பவன் இறந்துபோய்விட்டான். லைப் இன்ஷூரன்ஸ் பாலிசியின் ஷரத்துப்படி, பாலிசி எழுத்து மூலியமான ஆதர வில்லாமல், டிபாசிட் செய்யப்பட்டிருந்த போதிலும் டிபாசிட் வைத்துக்கொண்டவனுடைய கடனுக்கு கட்டுப்படு மானபடியால், இன்ஷூரன்ஸ் கம்பெனியார் பணத்தைக் கோர்ட்டில் கட்டிவிட்டார்கள். V என்பவன் அந்தத் தொகையைப் பெறும்படி வியாஜ்ஜியம் கொண்டுவந்தான்.

அசல் கோர்ட்டுத் தீர்ப்பு :—K என்பவன் எழுத்து மூலமான ஆதரவு பெற்றிருப்பதால் K என்பவன் தொகையை அடைய பாத்தியமுடையவன் என்று தீர்மானித்தார்கள்.

V என்பவன் பம்பாய் ஐகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

ஐகோர்ட்டுத் தீர்ப்பு :—இங்கிலாண்டு தேசச்சட்டத்தைப் பின்பற்றி அசல் கோர்ட்டுத் தீர்ப்பை மாற்றி V என்பவனுக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

K என்பவன் பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்துகொண்டான்.

பிரிவி கவுன்சில் தீர்ப்பு :—ஒரு லைப் இன்ஷூரன்ஸ் பாலிசி எழுத்து மூலமான ஆதரவில்லாமல் ஜாமீனுக்கு கொடுக்கப்பட்டிருந்தால், அந்த பாலிசி கடனுக்கு கட்டுப்படமாட்டாது. பராதீனச்சட்டம் (Transfer of Property Act), 130-வது பிரிவின்படி இங்கிலாண்டு சட்டத்தின் கொள்கைகளை இந்த சந்தர்ப்பத்தில் இந்தியாவில் பொருந்தக்கூடாது. அப்படிப் பொருந்தியதால் கீழ் அப்பீல் கோர்ட்டார் தவறிப்போயிருக்கிறார்கள். இந்தக் கேசைப் போலொத்த சந்தர்ப்பங்களில் எழுத்துமூலமான ஆதர வில்லாமல் போய்விட்டால் யாதொரு பாத்தியமும் உண்டாகமாட்டாதென்று ஷை பிரிவில் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அசல் கோர்ட்டுத் தீர்ப்பை உறுதிப்படுத்துகின்றோம்.

ஜட்ஜிகள் :—லார்ட் மக் நாட்டன்.
லார்ட் மவுல்டன்.
மிஸ்டர் ஜான் எட்ஜ்.
மிஸ்டர் அமீர் ஆலி.

Suit to Cancel Arbitration.

மத்தியஸ்தத்தை ரத்து செய்யதாவா.

அகமட்பாய் அபிபாய்—அப்பீல் வாதி.

பம்பாய் நெருப்பு, ஸ்டீமர் இன்ஷூரன்ஸ் கம்பெனி—அப்பீல பிரதிவாதிகள்.

கேசின் விபரம் :—H என்பவர் ஒரு ஆலைக்குச் சொந்தக்காரர். இவர் தம்முடைய கட்டடத்தையும், ஆலையையும், யந்திரங்களையும் தளவாடங்களையும் பம்பாயில் 19 நெருப்பு இன்ஷூரன்ஸ் கம்பெனிகளில் ரிஜிஸ்டர் செய்து வைத்திருந்தார். ஆலையில் நெருப்புப் பிடித்தபோது இன்ஷூரன்ஸ் கம்பெனிக்காரர்கள் வந்து ஆலையை வசப்படுத்திக்கொண்டு நெருப்பை அணைக்கத்தகுந்த பிரயத்தனங்கள் எடுத்துக்கொண்டார்கள். அப்படிச் செய்தும் கனத்த சேதம் நேரிட்டுவிட்டது. ஏற்பட்ட நஷ்டத்தை மத்தியஸ்தர்கள் மூலியமாகத் தீர்த்துக்கொள்ளுகிற

தென்று H என்பவரும் கம்பெனிக்காரர்களும் ஒப்புக்கொண்டார்கள். மத்தியஸ்தர்களால் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயங்கள் என்னவென்றால், நஷ்டம் என்ன ஏற்பட்டது, அப்படி ஏற்பட்டிருந்தால் எந்த எந்த கம்பெனிக்காரர் என்ன என்ன தொகை H என்பவருக்குக் கொடுக்கவேண்டும் என்பதே.

மத்தியஸ்தர்கள் முன்னில் விசாரணை நடந்து வந்தபோது, ஷை ஆலையின் யந்திரங்களும், தளவாடங்களும், துருப்பிடித்துக் கெட்டுபோய்விட்டன வென்றும், இப்படி துருப்பிடித்துப்போனதற்கு காரணம் என்னவென்றால் இன்ஷூரன்ஸ்கம்பெனிக்காரர்கள் தீப்பிடிக்கும்போது விட்டு அணைத்த ஜலத்தை பிறகு எடுத்துப்போடாமல் ஆலையிலேயே தங்கும்படியாகவிட்டதால், அவைகள் துருப்பிடித்துப்போய்விட்டன வென்றும் H என்பவர் சாக்ஷிகள் விட்டார். இன்ஷூரன்ஸ் கம்பெனிக்காரர்கள் ஆக்ஷேபித்தார்கள். மத்தியஸ்தர்கள், இன்ஷூரன்ஸ்கம்பெனிக்காரர்களுடைய அஜாக்கிரதையால் யந்திரங்கள் கெட்டுப்போய் நஷ்டமுண்டாயிருக்கிற தென்பதற்கு சாக்ஷிவிசாரணை செய்ய தங்களுக்கு அதிகார மிருக்கிறதென்று தீர்மானித்தார்கள்.

இன்ஷூரன்ஸ் கம்பெனிக்காரர்கள் தாங்கள்மத்தியஸ்தற்கு கட்டுப்படுவதாக ஒப்புக்கொண்டதை ரத்து செய்யவேண்டுமென்று பம்பாய் ஐகோர்ட்டில் மனு செய்துகொண்டார்கள்.

ஜட்ஜி மிஸ்டர் தேவர் தீர்ப்பு:—மத்தியஸ்தர்கள் அது விஷயமாக சாக்ஷி வாக்குமூலம் வாங்கினார்களே ஒழிய மற்றபடி அது விஷயமாக டாதொன்றும் பிரத்தியேகமாகச் சொல்லவில்லை. சொல்லும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தவும் மத்தியஸ்தர்கள் ஆக்ட் 10-வது பிரிவின்படி இந்தியாவில் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்றும் மத்தியஸ்தர்கள் நியாயம் தவறினதாக கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டாலொழிய கோர்ட்டார் மத்தியஸ்தத்திற்கு கட்டுப்படுவதாய் ஒப்புக்கொண்டதை ரத்துசெய்யமாட்டார்கள் என்றும்சொல்லி மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் அப்பீல் செய்துகொண்டன.

அப்பீல் கோர்ட்டார் தீர்ப்பு:—நெருப்பினால் உண்டானநஷ்டத்தை மட்டிலும்விசாரணை செய்ய மத்தியஸ்தர்களுக்கு அதிகார மிருக்கிறதேயொழிய, நெருப்பு அணைந்துபோன பிறகு உண்டான நஷ்டத்தை விசாரணைசெய்ய மத்தியஸ்தர்களுக்கு அதிகாரமில்லை என்று இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் பக்கம் தீர்ப்பு சொன்னார்கள்.

ஆகவே H என்பவர் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொண்டார்.

பிரிவி கவுன்சில் தீர்ப்பு:—இன்ஷூரன்ஸ் கம்பெனிக்காரர்கள் தாங்கள் நஷ்டமடையாமலிருக்க வேண்டுமென்கிற எண்ணத்துடன் தீப்பிடித்தபோது ஆலையை வசப்படுத்திக்கொண்டு சேதாரம் கம்மிப்படும்படி வேண்டியமட்டில் பிரயத்தனம் செய்து வந்திருக்கிறார்கள். சேதாரத்தைக் கம்மிப்படுத்துவதற்கு என்ன என்ன உபாயங்கள் செய்தால் யுக்தமாயிருக்குமென்று பட்டதோ அவைகளையெல்லாம் அவர்கள் செய்திருக்கிறார்கள். ஆதலால் ஆலையில் ஏற்பட்ட ஒரு குறிப்பிட்ட நஷ்டம் நெருப்பினால் உண்டானதல்ல வென்று, வேறொருகாரியத்தால் உண்டாயிருக்கிறதென்று கக்ஷி சொல்லக்கூடாதென்று கீழ் அப்பீல்கோர்ட்டுத் தீர்ப்பை ரத்துசெய்து அசல் கோர்ட்டுத் தீர்ப்பை உறுதி செய்தார்கள்.

அலகபாத் ஐக்கோர்ட்டு.

Master and Servant.

எஜமானும் வேலைக்காரனும்.

கேசின் விபரம்:—கான்பூரிலிருக்கும் ராலி பிரதர்ஸ் கம்பெனியில் ஒருவர் குமாஸ்தா வேலைபார்த்து வந்தார். இவருக்கு மாதமாதம் முதல்தேதியில் சம்பளம் கொடுப்பது என்பது கம்பெனியின் ஏற்பாடு. இவர் தன்னுடைய இஷ்டப்படி மாத நடுவில் வேலையை விட்டுவிட்டுப்போய்தான் வேலைபார்த்து வந்த நாள் வரையில் கூடுதலான சம்பளத்திற்கு கம்பெனியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்.

ஸ்மால்காஸ் கோர்ட்டார் தீர்ப்பு:—இந்தக்கேசிற்கு இங்கிலீஷ் சட்டம் பொருந்துமா என்று யோசனைசெய்யப்பட்டது. அப்படி ஒருக்கால் பொருந்தக்கூடியதாகவிருந்தாலும், வீட்டுவேலைக்காரர்கள்முதலிய கேவல வேலைக்காரர்களுக்குப் பொருந்துமேயொழிய குமாஸ்தா முதலியவர்களுக்குப் பொருந்தாதென்று, வாதி கேட்டுக்கொண்டபடி கம்பெனி பேரில் டிக்கிரி கொடுத்தார்கள். கம்பெனியார் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—இங்கிலீஷ் சட்டம் குமாஸ்தாக்களுக்கும் பொருந்தும், குடும்பத்தின் சாமானிய வேலைக்காரர்களுக்கும் பொருந்துமென்றும் மாதக்கணக்குப்படி மாதாமாதம்சம்பளம் பெறும் வேலைக்காரன் தன் இஷ்டப்படி வேலையிலிருந்து நின்றுபோய் விட்டாலும் சரி, அல்லது நியாயமான காரணத்தை முன்னிட்டு எஜமான் டிஸ்மிஸ்செய்துவிட்டாலும் சரி, முந்திய சம்பளத்திற்கு பிறகு நின்றுபோகிற வரையில் அல்லது டிஸ்மிஸ் செய்யப்படுகிறவரையில் வேலைசெய்த நாட்களுக்கு சம்பளம் கிடைக்காதென்று தீர்மானித்தார்கள்.

The Indian Companies Act.

இந்தியன் கம்பெனிச்சட்டம்.

இந்தியன் கம்பெனிச் சட்டம் 1882௵ பாஸ் செய்விக்கப்பட்டு இத்தனைகாலம்வரையில் ஊர்ச்சிதத்திலிருந்தது. இது தற்கால சந்தர்ப்பங்களுக்குப் போதாமலிருப்பதை கவர்மெண்டார் அறிந்து, ஒரு மசோதா ஆக்ட் தயார்செய்யும்படி ஆனரபில் சர் எட்வாட் கிளார்க்கையும் இன்னும் சில கனவான்களையும் நியமித்தார்கள். இவர்கள் ஒரு மசோதா ஆக்ட் தயார்செய்து சென்ற வருஷம் மார்ச்சு ௴ கூடிய சட்டஸபையின் ஆலோசனைக்கு ஆஜர்படுத்தினார்கள். இப்படி ஆஜர்படுத்தப்பட்ட பின்பு பொதுஜனங்கள் அறிந்துகொள்ளும்படி கெஜட்டில் விளம்பரப்படுத்தினார்கள். ஒருவருஷம் சென்றுகடந்த பிப்ரவரி ௴ கூடிய சட்டசபையில் இந்த மசோதா ஆக்ட்டை பிரத்தியேக கமிட்டியாரின் ஆலோசனைக்கு அனுப்பினார்கள். இந்த ஆக்ட்டைத் தயார் செய்தவர்கள் இரண்டு முக்கிய கருத்துகளை மனதில் வைத்துக்கொண்டு தயார் செய்திருக்கிறார்கள். அவைகள் என்னவென்றால், (1) கம்பெனியின் மானேஜ்மெண்டு அல்லது ஆக்ஷி நடவடிக்கையில் கவர்னமெண்டார் நேரே பிரவேசிக்கும்படியாகவிருக்கக்கூடாது. (2) இக்கம்பெனியின் பங்குதாரிகளுடையவும், அவைகளில் பணம்போட்டுப்புறட்டுகிறவர்களுடைய நன்மையும் உறிமையும் பாதுகாத்து, அக்கம்பெனிகளின் விருத்தியைப்பற்றியும், அவைகீள் செய்யும் வேலைகளைப்பற்றியும் அடிக்கடி தாராளமாயும், விஸ்தாரமாயும் பயிரங்கப்படுத்துவது. இந்த மசோதா ஆக்ட் ஒருவருஷமாக பயிரங்கபடுத்தப்பட்டதில் பொது ஜனங்களில் பலர், இந்த மசோதா ஆக்ட்டில் சேர்க்கப்படவேண்டிய விஷயங்களைப்பற்றி எழுதி அனுப்பியிருக்கிறார்கள். ஆனரபில் சர் எட்வர்ட் கமிஷன் இவைகளை எல்லாம் பரிசீலனைசெய்து சிலாக்கியமென்று அபிப்பிராயப்பட்டதை எல்லாம் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஒரிசா சங்கத்தார் கூறியிருக்கும் அபிப்பிராயத்தைமட்டிலும் நாம் எடுத்து எழுத மறந்துபோகக்கூடாது. இக்கம்பெனியின் விஷயமாக கவர்ன்மெண்டார் யாதொரு சட்டமுமே பிறப்பிக்கவேண்டியது அவசியமில்லை என்று எழுதியிருக்கிறார்கள். இதற்கு ஆனரபில் சர் எட்வர்ட் கிளார்க்கு அடியிற்கண்டபடி பதில் சொல்லியிருக்கிறார்: “தேசம் யோக்யத்தில் முற்றுப்பெற்றதல்ல, அயோக்கியர்களுமிருக்கக்கூடும். இவர்கள் கூட்டுக்கம்பெனிகள் ஏற்படுத்தி பாமர ஜனங்களுடைய பணத்தை கொள்ளை அடிக்கக்கூடும். இப்போதுதான் இந்தியாதேச ஜனங்கள் பணத்தைப் புதைத்துவைக்கும் புராதீன வழக்கத்தை விட்டுவிட்டு பரஸ்பர நம்பிக்கை பூண்டு வர்த்தககம்பெனிகளில் மூலதனமாகப்போட்டு லாபம் அடையத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்றும், இந்த புதிய குணாதிசயம் வளர்ந்துகொண்டிருக்கும்படியான காரியங்களை கவர்ன்மெண்டார் செய்யவேண்டுமே ஒழிய அதை பின்னடையச் செய்யும்படியாகச் செய்யக்கூடாதென்று” சொன்னார். ஆகையால் கம்பெனிச்சட்டம் அவசியமாகவிருந்தே தீர வேண்

டுமென்று சொன்னார். சில வர்த்தக கம்பெனிகள் மற்ற வியாபாரத்துடன் லாவாதேவியும் செய்து வருகிறபடியால், இதுவிஷயமாகச் சில ஷரத்துகள் இந்த ஆக்ட்டில் சேர்க்கப்படலாமா என்று ஆலோஜனைசெய்யப்பட்டது. அப்படிச்சேர்ப்பது கூடாதென்று கவர்ன்மெண்டு சட்ட மெம்பர் சொன்னதின்பேரில், லாவாதேவி என்கிற பாங்கிங் (Banking) விஷயமாக ஒருபிரத்தியேகச்சட்டம் பிறப்பிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆக்ட்டில் ஒரு மிகவும் முக்கியமான விஷயம் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவதென்னவென்றால், இந்தியாவில் ஒருவர்த்தக கம்பெனி, மற்றொரு கம்பெனியை மானேஜ்மெண்டு செய்துவருகிறது.

இது இந்தியாவில் அவசியமானகாரியம் என்று ஒப்புக்கொண்டபோதிலும், மானேஜ்மெண்டுசெய்யும் கம்பெனியின் அதிகாரம் ஒரு அளவுக்குட்பட்டதாகயில்லாமலிருப்பதால் அனேக தீங்குகள் நேரிடுகின்றன. உதாரணமாக, மானேஜ்மெண்டுசெய்துவரும் கம்பெனியார் ஒரு சரக்கை மானேஜ்மெண்டு செய்யப்பட்டு வரும் கம்பெனியின் நிமித்தம் ஒரு குறிப்பிட்ட விலை பேசி வாங்குகிறார்கள். அந்தவிலை பிறகு ஏறுமாகில், சரக்கு தங்களுடைய சொந்த கம்பெனிக்கு வாங்கினதுபோல விற்று தாங்களே லாபத்தை அடைந்துவருகிறார்கள். விலை இறங்கினால் மானேஜ்மெண்டு செய்யப்பட்டுவரும் கம்பெனியார் தலையில் கட்டிவிடுகிறார்கள். ஆகையால் மானேஜ்மெண்டு செய்யப்பட்டுவரும் கம்பெனியின் அதிர்ஷ்டம் மானேஜ்மெண்டு செய்துவரும் கம்பெனியின் இஷ்டத்தைப்பொருத்ததாகவிருக்கிறது.

ஆகையால் மானேஜ்மெண்டு செய்துவரும் கம்பெனியார் மானேஜ்மெண்டு செய்யப்பட்டுவரும் கம்பெனியின் நிமித்தம் பஜாரில் ஒரு சரக்கு வாங்கும்போது இன்ன கம்பெனிக்காக வாங்கப்பட்டதென்று காண்பிக்க ஒரு தஸ்தாவேஜி ஏற்படவேண்டுமென்றும் அந்த தஸ்தாவேஜி ஷை சரக்கு வாங்கப்பட்ட ரிக்கார்டுகளுடன் சேர்த்துவைக்கப்படவேண்டுமென்றும் இந்த ஆக்ட்டில் ஷரத்துகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மானேஜ்மெண்டு செய்யப்பட்டுவரும் கம்பெனியின் டைரக்டர்களுக்குள் மானேஜ்மெண்டு செய்துவரும் கம்பெனியார்கள் அதிகப்படியாகவிருக்கக்கூடாதென்றும், மானேஜ்மெண்டு செய்யப்பட்டுவரும் கம்பெனிக்கும் மானேஜ்மெண்டு செய்துவரும் கம்பெனிக்கும் உள்ள சம்பந்தங்கள் எல்லா பங்குதாரர்களும் அறிந்துகொள்ளும்படியாக அடிக்கடி பயிரங்கப்படுத்தப்படவேண்டுமென்றும் தாற்பரியம் கொள்ளும்படியான நிபந்தனைகள் அந்த ஆக்ட்டில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிரத்தியேக கமிட்டியார் இந்த ஆக்ட்டைப்பரிசீலனைசெய்து ரிப்போர்ட் செய்ததின்பேரில் சென்ற மார்ச்சுமீ கூடிய சட்ட சபையில் சட்டமாக பாஸ் செய்விக்கப்பட்டது.

Cotton Gambling Bill.

பஞ்சு சூதாட்ட மசோதா ஆக்ட்.

கல்கத்தாவிலிருக்கும் பஞ்சு வர்த்தகர்களில் சிலர் பஞ்சு இங்கிலாண்டு அமெரிக்கா முதலிய தேசங்களில் இன்றையதினம் என்னவிலைக்கு விற்குமென்று யூகித்து நிரணியிக்க பந்தியம் கட்டி தந்தி அடித்துக்கேட்கிறார்கள். இந்த பந்தியத்தில் பதினாயிரக்கண தொகை பந்தியம் கட்டப்படுகிறபடியால் பதில் தந்தி வரும்பரியந்தம் காலை 4 மணி வரையில் விழித்துகொண்டு சோஷ்டம் செய்துவருகிறார்கள். இப்பேர்ப்பட்ட சூதாடும் வீடுகள் கல்கத்தாவில் ஒவ்வொரு தெருவிற்கும் 4 அல்லது 5 இருக்கின்றனவாம். இவைகளில் உண்டாகும் கெடுதியை அடக்க ஒரு மசோதா ஆக்ட் தயார் செய்யப்பட்டுவருகிறதென்றும் சமீபத்தில் கூடப்போகிற சட்ட சபையில் ஆலோசனைக்குக்கொண்டுவரப்படுமென்றும் சொல்லப்படுகிறது.

White Posphorus Match Bill.

வெண்பாஸ்பரஸ் தீக்குச்சி மசோதா ஆக்ட்.

வெண் பாஸ்பரஸ்தீப்பெட்டி என்றால் சாதாரணமாய் நம்முடைய கடைகளில் கால் அணுவுக்கு இரண்டு பெட்டிகள் விகிதம் விற்பனைசெய்யப்பட்டுவரும் பெட்டிகளேயொழிய மற்றப்படிவேறல்ல.

இந்த வத்திப்பெட்டிகளைச்செய்யும் சாலையில் வேலைசெய்துவருகிறவர்களுக்கு "நெர்க்காசிஸ்" என்றுசொல்லும்படியான வியாதி உண்டாகி ஆளே அடையாளம் தெரியாமல் போய்விடுகிறுனும். பல்லு உதிர்ந்துபோகிறதாம். கன்னம் கெட்டுபோகிறதாம். இதிலிருந்து இன்னும் பல துன்பங்கள் உண்டாகின்றனவாம். ஆதலால் கிரேட் பிரிட்டன், ஜர்மனி, பிரான்சு, ஸ்பெயின், இட்டாலி, டென்மார்க், சுவிட்ஜர்லண்டு, நெதர்லாண்டு, ருஷியா, கிரீஸ், போர்ட்டுகல், பால்கன் தேசங்கள், ஆகிய இவைகளில் அத்திப்பெட்டிச்செய்யப்படக கூடாதென்றும் இறக்குமதியும் செய்யக்கூடாதென்றும் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோல இந்தியாவிலும் ஒரு சட்டம் பிறப்பிக்கவேண்டுமென்று ஒரு மசோதா ஆக்ட் தயார்செய்யப்பட்டு சட்டசபையின் ஆலோஜனைக்கு சென்றவருஷம் கொண்டுவரப்பட்டு நிகழ் வருடத்தில் பிரத்தியேக கமிட்டியாருடைய பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நார்வே தேசத்தில் செய்யப்பட்டுவரும் அத்திப்பெட்டிகள் இந்தியாவில் விசேஷமாக விற்பனை செய்யப்பட்டுவருகின்றன. இந்த மசோதா ஆக்ட்டால் "நார்வே" தன்னுடைய லாபகரமான வியாபாரத்தை இழக்கும். இந்தியாதேசக்கடைகளில் வேறே ரகத்திப் பெட்டிகள் விற்பனையாகி வருகிறபடியால் நாம இந்த மசோதா ஆக்ட்டைப்பற்றி பயப்படவேண்டியதில்லை.

The Hon. Sir Chinubhai Madhavlal, Baronet.

ஆனரபில் சர் சின்னுபாய் மாதவ லால், "பாரநட்."

(நிகழ் சஞ்சிகையின் உருவப்படத்தைப் பார்க்கவும்.)

பம்பாய் ராஜதானியிலிருக்கும் அகமடாபாட் நகர், பாரி ஆலைகளை ஸ்தாபித்து மூன்று தலைமுறைகளாக நிர்வகித்துக்கொண்டுவரும் ஒரு கௌரவ குடும்பத்தை தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றிருக்கிறது. ஆனரபில் சர் சின்னுபாய் மாதவலால், சி. ஐ. இ., என்னும் பிரபுவின் பாட்டனர் அமராவதியில் பாரி ஆலையை ஸ்தாபித்தார். பாட்டனர் நிர்வகித்துவந்த பிறகு, தகப்பனரும் நிர்வகித்துவந்தார். இவர்கள் இருவரும் இறந்துபோன பின்பு ஆனரபில் சர் சின்னுபாய் மாதவலால் அவர்களும் கௌரவமாய் நிர்வகித்துக்கொண்டுவருகிறர்கள். ஆனரபில் சர் C. மாதவலால் அவர்கள் தம்முடைய பாட்டனரால் வியாபாரத்தில் தற்புத்தி செய்யப்பட்டவர்.

பாட்டனரும் தகப்பனரும் இவருடைய பாலியத்திலேயே இறந்துபோய்விட்டார்கள். ஆதலால் இவருடைய பாலியத்திலேயே குடும்பபாரம் பொறுத்துப்போய்விட்டது. ஆயினும் அதற்குச்சளையாமல் குடும்பக்காரியங்களையும், ஆலைகளின் காரியங்களையும் நிர்வகித்துவந்ததுமன்றி முனிசிபல் கவுன்சிலராகவும், இன்னும் பொதுவிஷயங்கள் சம்பந்தபட்ட காரியங்களிலும் தலையிட்டுகொண்டு "மிகுந்த சாமர்த்தியசாலி" என்று எல்லோரும் புகழ்ந்து பேசும்படியாக காரிய நிர்வாகங்களை அவ்வளவு கௌரவமாகவும், சிறந்தபடியும் நடத்திவருகின்றனர். நம் தேசத்தில் படிப்பு விருத்திசெய்யப்படவேண்டுமென்பதில் மிகவும் கவலைகொண்டவர். அமராவதி நகரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சாஸ்திர ஆராய்ச்சி சாலைக்கும், ரன்ட்சோட்டாலால் கைத்தொழில் பள்ளிக்கூடத்திற்கும் முறையே ஆறு லக்ஷ ரூபாயும், மூன்று லக்ஷ ரூபாயும் உபகாரப்பணம் கொடுத்து உதவியிருக்கிறர் என்றால் கல்வியை நம் நாட்டில் பரவச் செய்வதில் எவ்வளவு தூரம்பற்றுடையவர் என்று நம் நேயர்கள் அறிந்துகொள்ளக்கூடும். இந்த கனவான் பொதுஜன நன்மைக்கான விஷயங்களிலும் உதவிபுரிந்துவந்திருக்கிறர். ரிவாபாய் ஆஸ்பத்திரிக்கு ஒன்றரை லக்ஷம் ரூபாய் இனமாகக் கொடுத்திருக்கின்றர். அகமடபாட் நகரில் இந்த பிரபு சம்பந்தப்படாத பொதுஜனக் காரியங்கள் எதுவும் நடக்கிறதில்லை. இவர் சகல ஜனங்களாலும் மதிக்கப்பட்டுவருவது போலவே கவர்ன்மெண்டாருடைய மதிப்பையும் பெறும்படியான பாக்கியத்தைப்பெற்றிருக்கின்றர். 1907-ல் சி. ஐ. இ. என்கிற கௌரவப்பட்டத்தையும், முதல் கிளாஸ் சர்தார் (Sirdar of the First Class) என்கிற பட்டத்தை 1909-லும், நைட்

(Knight) என்கிற பட்டத்தையும், 1910-லும் இந்த கனவானுக்கு கவர்ன்மெண்டார் தந்தருளியிருக்கிறார்கள். இவருடைய குணாதிசயங்களுக்கும், தேசத்திற்கு இவர் செய்திருக்கும் நன்மைகளுக்கும் இவ்வளவு உயர்ந்தபட்டங்களும் போதாதென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டு மகா உன்னதமானவும் மகா உயர்ந்தவுமான "பாரநட்" (Baronet) என்கிற பட்டத்தையும் இந்த வருஷ ஆரம்பத்தில் சூட்டி நன்குமதித்திருக்கிறார்கள். "பாரநட்" என்கிற கௌரவப்பட்டம் பார்சிகளுக்கும் முகமதியர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதே ஒழிய இந்துக்களுக்கு இதுவரையில் கொடுக்கப்பட்டதில்லை. ஆனரபில் சர் சின்னுபாய் மாதவலால் அவர்கள்தான் அந்த "பாரநட்" என்கிற பட்டத்தை இந்துக்களுக்குள் முதலில் அடையும்படியான பாக்கியத்தைப் பெற்றிருப்பவர். தனலக்ஷிமி தாண்டவமாடும்படியானபாக்கியத்தைப்பெற்றிருப்பதுடன் பொருமை, அடக்கம், தருமச்சிந்தனை முதலிய சிறந்த குணாதிசயங்களும் பொருந்தப்பெற்றிருக்கிறார்.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[குறிப்பு:—கடிதம் எழுதுகிறவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்தரவாதமல்ல. கடிதங்கள் தெளிவாகவும் காகிதத்தின் ஒரே புறத்திலும் எழுதப்படவேண்டும். பிரசுரிக்கப்படாத கடிதங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா.]

PROCEEDINGS OF CHAMBERS.

வர்த்தக ஆலோசனை சபைகளின் நடவடிக்கைகள்.

Bombay Chamber.

பம்பாய்ச் சேம்பர்.

சேம்பரின் வருஷாந்திரக் கூட்டம் சென்ற பிப்ரவரிமீ 26உ நடந்தேறியது. ஆனரபில் சர் C. H. ஆர்ம்ஸ்ட்ராங் சேர்மன் ஸ்தானத்தை வகித்துக்கொண்டார். சென்ற வருஷ ரிபோர்ட்டை பாஸ் செய்விக்கும்படி பேசின போது, வியாபார சம்பந்தமாக பம்பாயினுடைய க்ஷேமத்தை நாடி செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றியும், விருத்தியாம்சங்களைப்பற்றியும் வெகுவாய்ப் பேசினார். அவற்றுள் இரண்டொரு முக்கிய விஷயங்களை மட்டிலும் இவ்விடத்தில் எடுத்து எழுதுகின்றோம்:—இந்த வருஷத்தில் பம்பாய் சம்பந்தப்பட்ட ரயில்வே விஷயங்கள் முக்கியமாய் கவனிக்கப்பட்டனவென்றும், பம்பாயிலும் சுற்றுப்புறங்களிலும் சாமான் வண்டிகளாகிய "வாகன்களும்," தளவாடங்களும் போதுமானபடி யிருந்தபோதிலும், . ரயில்வே

ஸ்டேஷன் விஸ்தீரணமேயில்லாமலிருப்பதாலும், ரயில் கூட்ஸ் வண்டிகளை ஒதுக்குப்பக்கமாய் நிறுத்திவைப்பதற்கு ரயில்வே ஸ்டேஷன்களில் போதுமான விடமில்லாமலிருப்பதாலும், வண்டிகள் ஒருபுரத்திலிருந்து மற்றொரு புரத்திற்கு தாண்டுவதற்குப் போதுமான கிராசிங்குகள் (Crossings) இல்லாமலிருப்பதாலும், ஸ்டேஷன் இருபுரங்களிலும் போவதற்கும் வருவதற்கும் இரட்டைப் பாதைகள் (Double Line) இல்லாமலிருப்பதாலும் மிக கஷ்டமாயிருக்கிறதென்றும், இந்தக் கஷ்டம் கவர்ன்மெண்டாருக்குப் பலமுறை எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் சொன்னார். ரயில்வே சம்பந்தமான எல்லா வசதிகளும் இந்த சமயத்தில் செய்யப்படவேண்டியது அவசியத்தினும் அவசியமென்றும், சில துரை முகங்களில் கூர்மையான போட்டியுடன் நாம் போராடவேண்டியதாயிருக்கிறதென்றும், வட இந்தியாவுடன் வியாபாரம்செய்ய நாம் என்ன சௌகரியமான நிலையிலிருக்கவேண்டுமோ அந்த நிலைமையில் நாம் இல்லை என்றும், மட்டராவிலிருந்து அலிகாராவுக்கு ரயில் போடவேண்டியது மிக அவசியமாகவிருந்தபோதிலும் இன்னும் போடப்படவில்லை என்றும் சொல்லி விசனப்பட்டார். வியாபார விருத்திக்காக அனேக பெரிய வேலைகளை எடுத்துக்கொண்டு நடத்திவருகிறோம். அவைகள் எல்லாம் இப்போது முடிந்துபோகும் சமயமாயிருக்கிறது. நாம் வியாபாரத்தை விசாலப்படுத்தி நடத்தும்படி இப்போது ரயில் சம்பந்தமாகச் செய்யப்படவேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியாகச் செய்யப்படவேண்டுமென்று எடுத்துப் பேசினார்.

இந்தியன் பணவிஷயமாய் எடுத்துப்பேசி பாங்கியார் 8 வட்டி போடும் காலம் இந்த வருஷம் முன்னடியே வந்துவிட்டதென்று பஞ்சு வியாபாரிகள் கூப்பாடு போடுகிறார்கள் என்றும், இந்த கஷ்டத்திற்கு கவர்ன்மெண்டார் உத்திரவாதிகளல்ல என்று சொல்லமுடியாது என்று சொன்னார். பாங்கி வட்டி 8 ஆகவிருக்கும் இந்த சமயத்தில் கவர்ன்மெண்டு கஜானாவில் எதேஷ்டமான பணம் கையிருப்பிலிருக்கிறது. கடந்த அக்டோபர்மீ முதல் ஒவ்வொரு மாதத்திலும் $6\frac{1}{4}$, $8\frac{1}{2}$, $7\frac{1}{4}$, $9\frac{1}{4}$ கோடி ரூபாய் அதே தேதிகளில் முந்திய வருஷத்திலிருந்ததைவிட அதிகமாக கையிருப்புயிருந்துவந்திருக்கிறது. சென்ற பிப்ரவரிமீ கடைசியில் $24\frac{3}{4}$ கோடி கையிருப்பிருந்தது. வர்த்தகத்தில் போட்டுப் புரட்டிக்கொண்டிருந்த இவ்வளவு பெரிய தொகை கவர்ன்மெண்டார் கையில் தங்கிப்போய்விட்டால் வியாபாரத்திறகு ஊனம் உண்டாகுமென்று நான் எடுத்துச் சொல்லவுமா வேண்டும்! இந்தியன் பணவிஷயமாக நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷன் ஒழுங்குபடுத்தும் பரியந்தம் அப்போதைக்காகவாவது கவர்ன்மெண்டார் பணத்தை ரொம்பவும் கெட்டியாய் இறுக்கிப்பிடித்துக்கொள்ளாமல், கொஞ்சம் தாராளமாயிருக்கவேண்டுமென்று சொன்னார்.

இதன் பிறகு மிஸ்டர் கீட் பேசினார்; வெள்ளியை ரூபாயாக அடிப்பதில் கவர்ன்மெண்டாருடைய ஆதாயம் பவுன் கணக்கில் பிரத்தியேக நிதியாக வைக்கப்பட்டு வரவேண்டுமென்றும், இன்னும் பவுலர் கமிஷன் என்ன என்னவை சிபார்சு செய்திருக்கிறதோ அந்த சிபார்சை ஏற்று நடவடிக்கைக்குக் கொண்டுவரும்படியாக சேம்பர் கவர்ன்மெண்டாருக்கு வற்புறுத்திச் சொல்லவேண்டுமென்றும்சொன்னார். உலகத்தின் சப்ளைக்காக அனுப்பப்படும் பொன்னில், இந்தியாவே பெரும்பாலும் விழுங்கி விடுகிறதென்று இந்தியாவின்பேரில் ஒரு புகார் சொல்லப்படுகிறது.

அந்தப் புகார் வாஸ்தவமானதல்ல. 1912ம் வருஷத்திய கணக்கைப் பார்த்தால் உள்நாட்டிற்கும் வெளிதேச உபயோகத்திற்காகவும் கொடுத்த 21 கோடி பவுனில், இந்தியாவும், சிலோனுமாகச் சேர்ந்து $30\frac{1}{4}$ லக்ஷம் பவுனைத்தான் அடைந்திருக்கிறது என்று சொல்லி முடித்தார்.

மிஸ்டர் நசர்வான்ஜி வாடியாவும் பேசினார். இவர் பெரிய ஆலைச் சொந்தக்காரர். பஞ்சுத் தீர்வையைப்பற்றி பேசி, ஆனரபில் மிஸ்டர் L. W. கிரேகாம் லண்டனில் பல சேம்பர்கள் கூடிய மீட்டிங்கில் சென்ற வருஷம் பேசின பேச்சை பலமாக கண்டனம் செய்தார். "நம்முடைய சேம்பரில் முந்திய வருஷங்களைப்போல் லங்காஷயரிலிருந்து பஞ்சுச் சரக்குகளை மாத்திரம் இறக்குமதி செய்கிறவர்கள் மட்டிலும் மெம்பர்களாக விருக்கவில்லை. மற்றச் சரக்குகளை இறக்குமதி செய்கிறவர்களும், ஏற்றுமதி செய்கிறவர்களும், லாவாதேவி செய்கிறவர்களும் மெம்பர்களாகவிருக்கிறார்கள். நம்முடைய சேம்பர், அதனில் மெம்பராயிருக்கும் ஒரு வகுப்பாருடைய அபிப்பிராயத்தை எல்லா வகுப்பாருடைய அபிப்பிராயமாகச் சொல்லுவது தகாத காரியம். பஞ்சுத்தீர்வையை ரத்து செய்ய ஆனரபில் மிஸ்டர் டாடாபாய் வைசிராய் சட்ட சபையில் பிரரேபித்தபோது, நீண்ட நாழி தர்க்கம் நடந்ததென்பதும் நம்முடைய ஜனப்பிரதிநிதி மெம்பர்களில் ஒருவரை நீக்கி, மற்றவர்கள் எல்லாம் இந்தப் பிரரேபணையை ஆதரித்துப் பேசினார்கள் என்றும் உங்களுக்குத் தெரியும். இந்த மாதிரியான எதிரிடைத் தீர்வை இவ்வுலகத்தில் எந்த தேசத்திலும் கிடையாதென்றும், எந்த பிரிடிஷ் குடியேற்ற நாட்டிலும் கிடையாதென்றும், என் நம்முடைய தேசத்தில் மட்டிலும் போடப்படவேண்டுமென்றும் சொல்லி ஆக்ஷேபித்தார்கள். இந்தியா ஆளப்பட்டுவரும் தேசமானபடியாலும், தாய்போலிருக்கும் பார்லிமெண்டு சபையில் இந்தியாவிற்குப்பிரதிநிதி இல்லாமலிருப்பதாலும், இந்தத் தீர்வையைப் போட்டிருக்கிறார்கள். லங்காஷயருக்கு அவுஸ் ஆப் காமன்ஸ் சபையில் 60 மெம்பர்களிருப்பதால் இந்த பஞ்சுத் தீர்வையை போடவேண்டுமென்று பாஸ் செய்துவிட்டார்கள்.

பர்மா சேம்பர்.

பர்மா மாகாண சேம்பர் வருஷாந்திர மீட்டிங் சென்ற பிப்ரவரிமீ 26உ நடந்தேறினது. ஆனரபில் மிஸ்டர் A. W. பின்னிங் சேர்மெனாயிருந்தார். இந்தியாவில் வைசிராயின்பேரில் பாம் வெடி போட்ட சந்தர்ப்பங்கள் உண்டானதும், அதைப்போட்டவனைக் கண்டுபிடியாமலிருப்பதும் சுதேச வகுப்பாருடைய கௌரவத்திற்கு ஊனம் என்று பம்பாய், வங்காள சேம்பர்க்காரர்கள் அபிப்பிராயம் கூறினதை ஆதரித்துப் பேசினார். பப்ளிக் சர்விஸ் கமிஷனைப்பற்றி பேசி பர்மா சம்பந்தப்பட்டவரையில் சிவில் சர்விஸ் உத்தியோகங்களில் இந்தியர்களுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டியதவசியமென்று கமிஷனே, சாக்ஷி விசாரணையால் அறிந்துகொண்டு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். சென்ற வருஷத்தில் ரயில் போக்குவரத்து வசதிகளை விசாலப்படுத்தும் விஷயம் இந்தச் சேம்பரால் கவனிக்கப்பட்டுவந்ததென்றும், இறக்குமதியின்பேரில் செஸ்வரி போட இந்தியா கவர்ன்மெண்டாருக்குச் சிபார்சு செய்ய லப்டினன்ட் கவர்னர் இணங்கவில்லை என்றும், இந்தச் சேம்பர் அதுவிஷயமாக என்ன யோசனை சொல்லியிருக்கிறதோ அந்த யோஜனையை சிறிது சீர்திருத்திச் சிபார்சு செய்திருக்கிறார் என்றும் சொன்னார். போலீஸ் சூப்பரின்டெண்

டெண்டு வீடுகள் முதலியவைகள் இன்னும் கட்டப்படாமலிருப்பது மிகவும் நிந்தனை செய்யப்படக்கூடிய காரியமாக விருக்கிறதென்றும், இது விஷயமாக கவர்ன்மெண்டு கஜானு இலாக்காக்காரர்கள் தாராளமான மனதுடனிருக்கவேண்டுமென்றும் சொன்னார். ஷான்ஸ் டேட் ரயிலைப்பற்றியும் பேசினார்.

வங்காள சேம்பர்.

கடந்த ஜனவரிமீ மீட்டிங்கில் Steam Boiler and Prime Movers என்கிற இன்ஜின்கள் விஷயமாகப் பிறப்பிக்கப்பட்ட விதிகளைப்பற்றி யோஜனை செய்யப்பட்டது. சென்னையில் இந்த விதியை முன்னிட்டு இன்ஜின்களை உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறவர்களுக்கும், இன்ஸ்பெக்டர்களுக்கும் சமயாசமயத்தில் மோதிக்கொள்ளவேண்டியதாயிருக்கிறதென்றும், வங்காள அனுபோகம் எப்படி யிருக்கிறதென்றும் தெரிவிக்கும்படியாக சென்னையி லிருக்கும் தென்னிந்தியாச் சேம்பர் எழுதியிருந்தது. இதன்பேரில் "இண்டியன் மைனிங் அசோஷியேஷனுக்கும்" "இண்டியன் இன்ஜினீரிங் அசோஷியேஷனுக்கும்" இந்த லெட்டரை வங்காள சேம்பர் அனுப்பியிருந்தது. வங்காளத்தில் இந்த விதிகள் யாதொரு மனஸ்தாபத்தையும் விளைவிக்காமல் அமுலிலிருந்து வருகின்றனவென்று வங்காள சேம்பர் பதில் எழுதியிருக்கிறதுமன்றி சென்னையில் ஊர்ச்சிதத்திலிருக்கும் சட்டத்தைச் சீர்திருத்தும்படியாகவும், மேற்படி சீர்திருத்தப்பட்ட சட்டத்தின்படி ஒரு கமிஷன் நியமிக்கப்படவேண்டுமென்றும், அந்தக் கமிஷனில் இன்ஜின்களை உபயோகப்படுத்திவருகிறவர்கள் மெம்பர்களாக விருக்கவேண்டுமென்றும், அந்த கமிஷன், இன்ஸ்பெக்டர்களுக்கு மேல்விசாரணைக்கர்த்தகர்களாக விருக்கவேண்டுமென்றும் யோஜனை சொல்லியிருக்கிறது. தென்னிந்தியா சேம்பர் அதேமாதிரியாக லோக்கல் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தென் இந்தியா சேம்பர்.

இரண்டாவது பக்கத்தில் சென்னை முனிசிபாலிட்டியும் இரும்பு வர்த்தகர்கள் என்கிற வியாசத்தைப் பார்க்கவும்.

Madras Market Reports.

சென்னை மார்க்கட்டு ரிபோர்ட்டுகள்.

Piece-Goods.

பிஸ் கூட்ஸ்.

N.B.—நிசம் சஞ்சிகை அச்சாபீசு சட்டப்படி பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் முன்னில் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியதற்கு; மாதிரியாக தயார் செய்யப்பட்டபடியால் சாமான்கள் விலைபோடவில்லை. அடுத்த சஞ்சிகை முதல் வியபாரிபோர்ட்டுகள் பிரசுரிக்கப்படும். (*Ed.*)

General.
பொது.

(1) Grey Shirtings.
கோரா காடா.

(2) Grey Jaconets.
காரிகமல்.

(3) Grey Mulls.
காரிகமல்.

(4) Grey Dhotees.
காரிக மடிகள்.

(5) White Mulls.
சலவை மல்லுகள்.

(6) Prints.
கலர் சீட்டிகள்.

Twist and Yarn.

நூல்.

Home Market.
ஹோம் மார்க்கட்.

Local Market.
லோக்கல் மார்க்கட்.

Mule quality.

Local Yarr.
உள்ளூர் ரசம்.

Medio qualities.

Timber.
தேக்கு.

Coloured quality.

Sugar.
சர்க்கரை.

Kerosine Oil.
கிரசனையில்.

Metals.
உலோகங்கள்.

Iron.
இரும்பு.

Cement.
சிமென்ட்டு சுண்ணாம்பு.

Camphor.
சூடம்.

Coal.
நிலக்கரி.

Coke.
கோக்.

Ground-nut.
மணிலாக்கொட்டை.

Rice.
அரிசி.

Turmeric.
மஞ்சள்.

Tamarind.
புளி.

Chillies.
மிளகாய்.

Coriander.
தணியா.

Castors.
ஆமணக்கு.

Onions.
வெங்காயம்.

Potatoes.
உருளைக்கிழங்கு.

Gunnies.
சாக்குகள்.

Hides and Skins.
தோல்.

Home Market.
சீமை மார்க்கட்.

Local Market.
லோக்கல் மார்க்கட்.

Hides.
எருமைத்தோல்.

Goat.
வெள்ளாட்டுத்தோல்.

Sheep.
ஆட்டுத்தோல்.

Cotton.
பஞ்சு.

The Madras Money Market.
பவுன் பஜார்.

Government Securities.
கவர்ன்மெண்டு பண்டுகள்.

Shares.
பங்குகள்.

Bullion.
பொற்கட்டி.

Freights.
ஸ்டீமர் கேழ்வை.